

# திறவுகோல்

2051 புரட்டாசி
மாத இதழ்

ஒரு அரசியல் கட்சியும்,
அதன் அதிசய உறுப்பினர்களும்...

---

பின்னிரவு கனவு..!

---

புதிய கல்வி கொள்கை

---

பிரஞ்சு தந்தையின் சீனத்து மகள்

வெளியீடு
**மன்னையின் மைந்தர்கள் அமைப்பு**

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் குழு ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு, இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. தற்பொழுது அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படை வசதிகளை சரி செய்து கொண்டு வருகிறார்கள்.

நோக்கம்

மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

# ஒரு அரசியல் கட்சியும், அதன் அதிசய உறுப்பினர்களும்...



செந்தில் பக்கிரிசாமி
மன்னை

ஒரே தேர்தல் அரசியல் கட்சியில் பயணிக்கும் மாறுபட்ட எண்ணங்கள் கொண்டவர்கள் பற்றிய ஒரு அலசல்.

என்னதான் ஒரு கட்சி ஒரு தத்துவார்த்த ரீதியில் ஒரே கொள்கையை மட்டுமே மையமாகக் கொண்டிருந்தாலும், அந்த கட்சியில் பயணிப்பவர்கள் அனைவரும் அதே எண்ண ஓட்டத்தில் பயணிப்பார்கள் என்று சொல்ல முடியாது. அது நடைமுறை யதார்த்தம் அல்ல. அப்படியான ஒரு தேர்தல் அரசியல் கட்சியில் என்னென்ன மனநிலையோடு வேறுபட்ட பலர்  என்று பார்ப்போம்.

1. ரசிக குஞ்சிகள்.
இவர்கள் கட்சியின் தலைமையோடு அதாவது தலைவர் என்ற பொறுப்பில் இருக்கும் ஒரு தனி மனிதனோடு மிக நெருக்கமாக இருக்கவே விரும்புவார்கள். அவர்களது ரசிகர்களாகவே இருப்பார்கள். அவரது துதிபாடிகளாகவும் இருப்பார்கள். தலைமைப் பொறுப்பில் இருப்பவர்கள் என்னதான் தவறு செய்தாலும் அதை எல்லாம் பொருட்படுத்தாமல் தலைமைக்கு அதாவது அவர்கள் தலைவருக்கு இறுதிவரை விசுவாசமாக இருப்பார்கள். இவர்களால் மக்களுக்கும், இந்த நாட்டிற்கும் எந்த பயனும் இல்லை.

ஆனால் கட்சி ஒரே தலைமையோடு நீண்ட காலம் பயணிக்க இவரைப்போன்ற விசுவாசமான ஆட்களே அவர்களுக்கு தேவை. வெற்றி, தோல்வியை மீறி ஒரு கட்சி நீண்ட காலம் பயணிக்க இந்த பிரிவில் உள்ளவர்கள் கட்சியில் அதிகம் பேர் இருக்க வேண்டும். இந்த ரசிக மனப்பான்மைதான் ஒரு தலைமை தான்தோன்றித்தனமாக செயல்பட்டாலும், அவர்கள் களத்தில் தொடர்ந்து இருக்க உதவும். அநேகமாக தமிழ்நாட்டில் இதுவரை கடந்த 50 வருடங்களாக பயணிக்கும் கட்சிகளில் இந்த பிரிவு மக்களே அதிகம் இருப்பார்கள். இருந்து கொண்டும் இருக்கிறார்கள்.இப்படிப்பட்ட ரசிககுஞ்சிகளால் சமூகத்திற்கு எந்தவித மாற்றமும் ஏற்படாது.

2. ஒட்டுண்ணிகள்.
தன் வாழ்க்கையின் உயர்வுக்காக மட்டும் ஒரு கட்சியில் பயணிப்பவர்கள்.

இவர்களுக்கு  அரசியல் என்பது லாபம் தரும் தொழில். முதல் போட்டு லாபம் எடுப்பது போன்று. கட்சியில் நல்ல பெயர் எடுத்து ஒரு நல்ல பொறுப்பை பெற்று நல்ல முறையில் வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற துடிப்புடன் வெறித்தனமாக

உழைப்பவர்கள். இவர்களைப் போன்றவர்கள் ஒரு கட்சியின் வளர்ச்சிக்கு மிகவும் உதவுவார்கள். ஆனால் இவர்களாலும் மக்களுக்கு எந்த நன்மையும் இல்லை. அதே வேளையில் கட்சிக்கும் இவர்களால் தொடர் நன்மை இருக்காது. ஒருவேளை இவர்கள் நினைத்த பதவி கிடைக்கவில்லை என்றால் உடனே மனசாட்சியின்றி அதுவரை கடுமையாக விமர்சித்து வந்த வேறு கட்சிகளோடு அடைக்கலமாகி விடுவார்கள்.

இவர்கள் நிலையற்றவர்கள். இவர்களால் மக்களுக்கு எந்த வகையிலும் துளிகூட நன்மை நன்மை இல்லை. அதேபோல அவர்கள் சார்ந்திருக்கும் கட்சிக்கும் தொடர் நன்மையும் இல்லை. தற்காலிக தேவைக்கு மட்டுமே இவர்கள் உதவுவார்கள். இந்த பிரிவினர் இப்போது வரை அனைத்து கட்சிகளிலும் இருக்கிறார்கள். ஆனால் இவர்கள் கட்சியை விட்டு வெளியேறி தன் கொள்கைக்கு சற்றும் பொருந்தாத ஒரு கட்சியில் இணையும்போது தான் அவர்கள் யார் என்று உலகம் அறிந்து கொள்ளும். ஒருவரை சார்ந்து அவரின் உழைப்பை சுரண்டி விட்டு பின் வேறு ஒருவரை தேடிச்செல்பவர்கள். சமூகத்திற்கு மிக ஆபத்தான ஒட்டுண்ணிகள் இவர்கள்.

3. மேய்ப்பாளார்கள்.
கட்சியில் இருக்கும் எதிர்சிந்தனை பிரிவினர் இவர்கள்.

இவர்கள் கட்சிக்குள் இருந்து கொண்டே கட்சியின் நடவடிக்கைகள் சிறிது பிசகினாலும் பொதுவெளியில் போட்டு பிளந்து விடுவார்கள்.
இது போன்ற பிரிவினர் இருப்பது ஒருவகையில் நல்லது. இன்னொரு வகையில் கெட்டது.

அதாவது கட்சி சரியான பாதைக்கு போக வேண்டிய அவசியத்தை கட்சி தலைமைக்கு உணர்த்தும். அதே வேளையில் பொதுமக்கள் மத்தியில் கட்சி பற்றிய அதிருப்தியை உருவாக்கும். இந்த பிரிவு என்பது நவீன அரசியல் கட்சிகளில் மட்டுமே சாத்தியம். பழம்பெரும் கட்சிகளில் இது போன்ற பிரிவினர்களுக்கு இடமே இல்ல. முழுக்க முழுக்க கட்சிக்கு அடிமையாகாமல் தன் கொள்கைக்கு ஏற்றபடி கட்சி இருக்க வேண்டும் என்று விரும்புபவர்கள். இவர்களால் கட்சி தலைமைக்கு பெரும் குடைச்சல் என்றாலும், இன்றைய நவீன அரசியல் வடிவமான இந்த செயல் ஒருவகையில் தேவை தான். ஆனால் அது அளவுக்கு மீறினால் யாருக்கும் பலன் இல்லாமல் போய் விடும். ஏறக்குறைய ஒரு வழி தவறி போகும் ஆட்டை சரியான பாதைக்கு திருப்பும் ஒரு மேய்ப்பர் செயல்தான் இது. ஆனால் பிரச்னை என்னவென்றால் இங்கே ஆடுகள்தான் வழி தவறி போகும் மேய்ப்பாளருக்கு வழிகாட்டும்படி இருக்கும் சூழலில் ஒரு கட்சித்தலைமை இருப்பது. அதேவேளையில் தான் போகும் பாதைக்கு ஒரு தலைமையை இழுக்கும் ஒரு புதிய மேய்ப்பும் உண்டு. இது கட்சிக்கு ஆபத்தானது.

4. விசச்செடிகள்
இவர்களுக்கென்று பெரிதாக எந்த கொள்கையும் இருக்காது. கட்சித்தலைமையோடு நெருக்கமாகி அவருக்கு வேண்டியதை செய்து, பின் தலைமையை தன்

கட்டுப்பாட்டிற்குள் வைத்துக்கொண்டு, பின் தன் விருப்பப்படி தனக்கு ஒத்து வருவோரை மட்டுமே கட்சியில் இருக்கும்படி செய்துவிடுவார்கள். இவர்கள் ஒரு சிலர் ஒரு பெருங்கூட்டத்தில் இருந்தாலும் அனைத்தையும் சீரழித்துவிடுவார்கள்.

இந்த பிரிவில் உள்ளவர்களை இனம் கண்டு எவ்ளோ சீக்கிரம் அவர்களை ஒரு தலைமை அழிக்கிறதோ அதுதான் அவர்கள் எதிர்காலத்திற்கு நல்லது. ஆனால் இந்த பிரிவில் உள்ளவர்கள் பெரும்பாலும் அனைத்து கட்சிகளிலும் இருப்பார்கள் என்பதே வேதனையான உண்மை.

கட்சிக்கும், இந்த சமூகத்திற்கும் பேராபத்தான விசச்செடிகள் இவை.

5. முத்துக்கள்

உயரிய சிந்தனகளோடும்,கொள்கைகளோடும் மட்டுமே ஒரு கட்சியில் பயணித்து மிகத்தூய்மையான அரசியலை மேற்கொள்வோர். இவர்கள்தான் மக்களுக்கானவர்கள்.இவர்களால் மட்டுமே சமூகமாற்றத்திற்கு உதவ முடியும். இவர்களால் ஒரு கட்சிக்கும், மக்களுக்கும் ஒருங்கே நன்மை பிறக்கும். இவர்கள் வழிகாட்டுதலில் பெயரில் ஒரு கட்சி இயங்குமாயின் அது அனைவருக்கும் நல்லது. ஆனால் அதற்கு கட்சித்தலைமை ஒத்துழைக்க வேண்டும். ஒருவேளை கட்சி தலைமை தவறு செய்யும் பட்சத்தில் இவர்கள் தொடர்ந்து அதே கட்சியில் பயணிக்க மாட்டார்கள். அதே வேளையில் அவர்கள் கொள்கைக்கு பொருந்தாத இடத்திலும் போய் நிற்க மாட்டார்கள். இறுதிவரை இந்த சமூகத்திற்கு தன்னால் ஆன உதவியை வாழ்நாள் முழுதும் செய்துகொண்டு இருப்பார்கள். ஆனால் இவர்களைப் போன்றோர் ஒரு கட்சியில் இருப்பது வெகுக்குறைவு. அப்படியே இருந்தாலும் தொடர்ந்து பயணிப்பது அரிது. இவர்களைப் போன்ற முத்துக்களை இழந்துவிட்டால் ஒரு கட்சி வெறும் சிப்பிதான்.

--

மன்னை செந்தில் பக்கிரிசாமி

# வெளுத்துப் போன வெள்ளாடைகள்

சிம்மாசனங்கள்
இப்போதெல்லாம்
நரி ஆசனங்களாக!

வேட்டி சட்டையோடு
தலைவர்கள்!
மக்களின் தலையில்
துண்டு!

அதிகாரப் போதையில்
தலைகளெல்லாம்
கவிழ்ந்து கிடக்கின்றன
சக்கரங்களின் முன்!

வர்ணங்களை துணைக்கொள்ளும்
அரசியல்வாதிகளின்
பொய் பேச்சிலும்
வெளி ஆடையிலும் மட்டும்
வெள்ளை!

அதிகப் பணம் தருபவனுக்கு
குத்தகை விடப்படுகிறது நாடு
ஐந்து ஆண்டுகளுக்கு!

உலகமே நாடக மேடை!
சிறந்த நடிகர்கள் இங்கே
தலைவர்கள் மட்டும்!

காணாமல் போன அறிவிப்பு
காடு
மலை
ஆறு
இன்னும் கொஞ்ச நாளில்
மொத்த நாடும்!

சுதந்திர தினம்
வருகிறது
சுதந்திரம் தான்
இன்னும் வரவில்லை

விமானங்கள் இறங்குகின்றன
தலைவர்கள் இறங்குவதோ
ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை!

ஐந்தாண்டுகளில்
மாறவில்லை
குண்டும் குழியுமான சாலைகள்!
பளபளப்பாக மாறியது
பிரதிநிதிகளின் முகங்கள்!

மக்களாட்சியின்
நான்கு தூண்கள்
இப்போது தாங்குகின்றன
அதிகாரத்தின் அடிமைகளாக!

பணக்காரர்கள் நிறைந்த
நாடும் மக்களும்
ஏழையாக!

பெயரை
முன்னால் அழைத்து
சாதியையும் மதத்தையும்
பின்னால் பேசுகிறது
சமூகம்!

சம்பாதித்து
வீடு திரும்பும் வழியில்
ஆசை காட்டி
பறித்துக் கொள்கிறது
விபச்சார மதுக்கடை!

மக்களே!
சட்ட நாடாளுமன்றங்களில்
பலகையை மாட்டிவிடுங்கள்

திருடர்கள் ஜாக்கிரதை!

கூட்டணியை நிர்ணயிக்கின்றன
கேசுகளும் சூட்கேசுகளும்!


கையை உடைத்து
ஒரு விரல் போதுமென்கிறது
இன்றைய மக்களாட்சி!

வரிகளால்
இன்னும் உறிஞ்ச வேண்டியது
எங்களின் குடல்கள் மட்டும்!



சா.கா.பாரதி ராஜா,
38-3, கைலாசநாதர் கோயில் தெரு,
பெரிய நத்தம்,
செங்கல்பட்டு. 603002.
9944315732, 8610078040

---





ரோசி
(ஆசிரியை)

# ஐம்மரங்கள்

அன்பெனும் மரத்தில்
காய்கள் இனிக்கும்,
கனிகள் பாராட்டும்,
வேர்கள் உணர்வூட்டும்;

காதலெனும் மரத்தில்
காய்கள் கண்ணடிக்கும்,
கனிகள் கரம் பிடிக்கும்,
வேர்கள் நிழல் சுமக்கும்;


உறவெனும் மரத்தில்
காய்கள் சிரிக்கும்,
கனிகள் அழுகும்,
வேர்கள் தாங்கும்;

அறிவெனும் மரத்தில்
காய்கள் நீண்டு பாடும்,
கனிகள் சிறிது பேசும்,
வேர்கள் அமைதியாகும்;

வாழ்வெனும் மரத்தில்
காய்கள் தவழும்,
கனிகள் உருளும்,
வேர்கள் உதிரும்...

வெ.ஹேமந்த் குமார்,
ஈரோடு





ரா. மதுவர்ஷினி,
சரஸ்வதி வித்யாலயா பள்ளி
பெருவிடைமருதூர்

# ஒரு கரிச்சான் கருவியின் கதறல்

அழகிய கான்கிரிட் கூட்டுக்குள் வாழும்
அற்ப மனிதர்களே - அங்கே தான்
என் காடும் கூடும் இருந்தது
அறிவீரா?

கைக்கும் பைக்கும் அடக்கமாய்
கைப்பேசியோடு
அலைகிறாய் - அதுவே
காலன் அனுப்பிய கயிறு
கொஞ்சம் கொஞ்சமாய் எம் கழுத்தை
சுருக்கி கொண்டிருக்கிறது

ஆம்..!
கண்ணில் படாமல் ஒளிந்தாலும்
கதிர்வீச்சு எங்களை
விடுவதாயில்லை

கொள்ளைகளில் வசிக்கும் எம்
குலத்தை
கோபுரங்கள் கட்டி அழிக்கிறாய்.
கோரப்பல் கொண்ட ராட்சசன்
பிடியில் கொண்டாட்டமாய்
இருக்கிறாய்

மாடியில் இருக்கும் மகளை
கூப்பிடும் குறுஞ்செய்தி,
எதிர்வீட்டு படுக்கையறை வரை
போகும் புகைப்படக்கருவி

பேச்சு வார்த்தை இல்லாத உறவுக்கு
கீச்சில் வாழ்த்து,

சந்தேகப் பிராணிகளுக்கு
தீனிப்போடும் செயலிகள்

தொலைவில் உள்ளவரை இணைக்கும்
கைதான்- தொடும் தூரம் உள்ளவரை
தொலைத்துவிட்டு தேடி
பார்க்க வைக்கிறது..

குயிலின் குரலையும் வண்டுகளின்
ரீங்காரத்தையும் ரிங்டோன் வைக்கும்
உனக்கு - என்
கூக்குரல் கேட்கவில்லையே..

மகரந்த சேர்க்கைக்கும் மரங்களின்
விதைக்கும் எங்கள் எச்சங்கள் தான்
மிச்சம்..

சிறு திரையில் சிக்கி சிரிக்கும்
நேரமெல்லாம் என் சிறகுகளில்
தீ வைக்கப்படுகிறது..

கருக்கலைப்புக்கு கடும் தண்டனை
என்றார்கள் ஊரில் - கருகி
கொண்டே இருக்கிறது முட்டைகள் -
உங்கள் கோபுரங்கள் மீது தொடுத்த
வழக்கு இன்னும் நிலுவையில்
உள்ளது..

செம்மீசை சின்னானும் செம்பருந்தும்
சுற்றி திரிய முடியாமல் -சொர்க்கம்
போய் சேர்ந்தது சுயநல உலகால்

என் செல்களில் மாற்றமே செல்களால்-
ஆனால் முடிந்தவரை பகிரச்
சொல்கிறது
முகப்புத்தக செயலி..

மருந்துக்கு பதில் நோய்
அமைதிக்கு பதில் அனுகுண்டு

இவைதான் அறிவியலா..?

நிலத்தை மாசு செய்துவிட்டு
நிலவில் வீடும்
செம்மையான மண்வளத்தை சீர்குலைத்துவிட்டு
செவ்வாயில் நீரும் தேடும் கும்பல் இது..

வரமாய் கிடைத்த அறிவியலில்
வாழத் தெரியாத விலங்குகளே..
அடுத்த தலைமுறைக்கு என்னை
அருங்காட்சியகத்திலா காட்டுவீர்கள்..

காணாமல் போன குருவிக்கும் கழுகுக்கும் கடவுளிடம் கருணை மனு ஒன்றை
போட்டிருக்கிறேன் - அவரும்
தற்சமயம் தொடர்பு எல்லைக்கு
வெளியில் உள்ளாராம்...!

இப்படிக்கு,
ஊர் குருவி

**- துர்க்கா சம்பத்குமார்**




ஓவியம்
கிறிஸ்ட்

# புதிய கல்வி கொள்கை

‘‘புதிய கல்வி கொள்கை’’ இது நல்லதா கெட்டதா? எழுதிய வடிவம் பார்க்கும்போது சற்று நல்லது போன்று தெரியும். ஆனால் கண்டிப்பாக கிடையாது. அந்த கொள்கையின்படி மூன்றாம் மொழி என்ற புதிய திட்டம் கொண்டு வரபட்டுள்ளது. அந்த மூன்றாவது மொழி மாணவர்களின் விருப்பம் என்று உள்ளது. ஆனால் நடைமுறையில் அது கண்டிப்பாக சாத்தியம் இல்லை, ஏனென்றால் ஒரு கிராமப்புற பள்ளியில் அனைத்து மொழி ஆசிரியர்கள் இருக்க வாய்ப்பே இல்லை. பொறியியல் கல்லூரிகளில் விருப்பமான பாடம் என்ற வகை உண்டு. பொறியியல் படிப்பு படித்தால் தெரிந்து இருக்கும்.

இவை, மாணவர்கள் விருப்பத்தை பொறுத்து, ஒன்று அல்லது இரண்டு பாடங்களைத் தேர்வு செய்யலாம். ஆனால் பெரும்பாலும் இது நடக்காது, விருப்பமான பாடம் அந்த துறையில் இருக்கும் ஆசிரியர்கள் அடிப்படையில் தலைமை பேராசிரியரால் தேர்ந்தெடுக்கப்படும். மாணவர்கள் விருப்பத்திற்கு அங்கு இடமில்லை. (பெரிய தனியார் கல்லூரிகள் உட்பட) இது கல்லூரியின் நிலைமையாகும், கிராமப்புற அரசாங்கப் பள்ளியின் நிலைமையைச் சற்று கற்பனை செய்து பாருங்கள். பொதுவாக கிந்தியா முழுவதும் மற்ற மொழி ஆசிரியர்களை ஒப்பிடுகையில் கிந்தி ஆசிரியர்கள் எளிதில் கிடைப்பார்கள்.

ஆதலால், இது கிந்தி திணிப்புக்கு இன்னொரு பெயரே..!! ஏன் கிந்தி திணிப்பு நடக்கிறது, காரணம் தான் என்ன? கிந்தியாவிற்கு விடுதலை கிடைத்த காலக்கட்டத்தில், நாடு பிளவுப்படுமோ என்றும் அதற்கு மொழி காரணம் ஆகிவிடுமோ என்று மேம்பட்ட சிந்தனையாளர்கள் கிந்தியைக் கட்டாயமாக்க முயன்றார்கள். இது மற்ற மொழியினருக்கு பிடிக்கவில்லை. குறிப்பாக தமிழ்நாடு, அதை அப்போதே தடுத்து நிறுத்தி விட்டோம் என்பது அனைவரும் அறிந்த ஒன்று. ஒரே மொழி பேசினால் கிந்தியா ஒன்றியம் ஒன்றாக இருக்குமா? காந்தி அதை பொய் என்று முன்பே காட்டினார்.

1920களில் காந்தி நாட்டின் மூலை முடுக்காக காங்கிரசை விரிவுபடுத்த விரும்புகிறார். இதற்காக, அவர் முக்கியமாக இரண்டு விடயங்களைச் செய்தார், ஒன்று அவர் காங்கிரசில் சேர உறுப்பினர் கட்டணத்தைக் குறைத்தார். மற்றொன்று மொழியின் அடிப்படையில் மாகாண காங்கிரசு குழு அமைத்தார். இந்த அமலாக்கத்திற்குப் பிறகு, ஏராளமான மக்கள் காங்கிரசில் இணைந்தனர், இதற்கு காரணம் பிரிட்டிஷ் காலனித்துவத்தைப் புரிந்துகொள்ள மொழியியல் அடிப்படையிலான மாகாண காங்கிரசு மக்களுக்கு உதவியது.

மற்றொரு பக்கம் காங்கிரசிற்கு இது உறுப்பினர் அதிகரிக்க உதவியது, அது

பிரிட்டிசிற்கு பெரிய தலைவலியாக இருந்தது. ஆகவே ஒரே மொழி பேசினால் ஒன்றாக இருப்போம் என்பது உறுதியும் இல்லை, ஆதாரமும் இல்லை. தாய்மொழியை அடிப்படையாகக் கொண்ட காங்கிரசு பிரிட்டிசின் உண்மையான முகத்தைப் புரிந்துக் கொள்ள உதவியது.

சமசுகிருதமயமாக்கல் - மக்கள் மீதான அடுத்த அம்பு, சமசுகிருதிற்கும் புதிய கல்விக் கொள்கைக்கும் தொடர்பு உள்ளதா என்றால் சந்தேகம் வரும்? 100% உண்டு. கிந்தியை தாய் மொழியாக கொண்டு பல மாநிலங்கள் உள்ளன. கிந்தி பேசும் மாநிலங்களில், நிச்சயமாக அவர்கள் சமசுகிருதத்தை மூன்றாம் மொழியாகத் தேர்ந்தெடுப்பார்கள். அதை கண்மூடித்தனமாக சொல்லவில்லை, ஒரு காரணம் இருக்கிறது.

இந்து மக்களுக்கு சமசுகிருதம் புனிதமான மொழி கருதப்படுகிறது, அவர்கள் சமசுகிருதத்தை பலவந்தமாக திணிப்பார்கள். இதில் தமிழ் பேசும் நமக்கு என்ன பிரச்சினை? கிந்தி பேசும் பல மாநிலங்களில் படிப்பறிவு மிக குறைவு, சமசுகிருதம் அவர்களுக்கு ஒரு சுமையாக இருக்கும், வாழ்க்கைக்கு தேவையான பாடங்களை படிக்க வாய்ப்பு குறையும். அவர்களின் கல்வியறிவற்ற தன்மை சரியான ஆட்சியாளரை தேர்வு செய்ய இயலாது. அதை நம்மால் கண்கூட பார்க்க முடிகிறது.

இதில் மேலும் இன்னொரு சிக்கல் உள்ளது. சமசுகிருதவாதிகளின் ஆதிக்கம் அதிகரிக்கும், பல தசாப்தங்களுக்கு முன்னர், சமசுகிருதம் மருத்துவத்தைக் கற்க ஒரு கட்டாய மொழியாகும். அவர்கள் ஆதிக்கம் செலுத்த தொடங்கினால், அவர்கள் என்ன வேண்டுமானாலும் செய்வார்கள். ஒரு வாதம், மும்மொழி கொள்கை ஆதரவாளர்கள் முன் வைப்பது, மும்மொழி கொள்கை என்பது மத்திய அரசு ஏழை மாணவர்களுக்கு கூடுதலாக ஒரு மொழி படிக்க வாய்ப்பு அளிக்கிறது அதை ஏன் தடுக்கிறீர்கள் என்று!!! இதை சொல்பவர்கள் யார்..?

நீட் தேர்வு என்று பெயரில்  ஏழை மாணவர்களுக்கு மருத்துவ படிப்பை கனவாகவே மாற்றிய அதே நல்ல மனம் படைத்தவர்கள் தான். இந்த தேசியவாதிகள் ஒரு நாள் ஒரு மொழி ஒரு தேசம் என்ற வாசகத்தை குறிப்பாக ஒரே மதத்தையும் அடைவதில் வெற்றிபெறலாம், ஆனால் நாட்டின் எல்லைகள் அதே அளவு இருக்காது. பன்முகத்தன்மை இருந்தால், ஒற்றுமை இருக்கும்.  நீங்கள் பன்முகத்தன்மையை அழிக்க விரும்பினால், ஒற்றுமை இலவச இணைப்பாக வரும்

---

நிழலன்

# பின்னிரவு கனவு..!

அந்தரத்தில் அரங்கேற்றம் தத்திதாவி மூச்சுமுட்ட வேட்டையாடி ஓய்ந்தன
கழனியற்ற நிலத்தில் நுணலும்அரவும்

தோல்சுறுங்கி பொழிவிழந்து ஒட்டிய வயிறோடு உறவாடி நகைத்தது
வாலமாய் பிளந்துபோன களர்நிலம்

கல்பரப்பி விளையாடி கால்சட்டை காவலிருக்க ஓட்டமும் நடையுமாய்
ஓய்ந்துபோனது மாரிபொய்த்த மாமடு

சந்தையில் வாங்கிய சதங்கை சாய்ந்தாடியது ஏர்பூட்டா பகடுகளின் ஏக்கமாய்
கசாப்புகடையில்

துருப்பிடிச்சு தேய்ந்தது போத்தற்ற வண்டியின் கடையாணி விரக்தியில்
கட்டைவண்டி தற்கொலை விறகுக்கடையில்

சாலையின் இருபக்கமும் சல்லாபித்து நின்றதற்காக நிறைவேற்றப்பட்ட கழுவேற்றலின்
நீதிவேண்டி வெப்பசலனமாய் வெட்டியெறியப்பட்ட மரத்தின் எச்சங்கள்

அரைகுறை ஆடைகளையும் களைத்தெறிந்து ஆசுவாசப்படுத்தின மழையை தருவித்து
மின்னலின் இச்சையை மேகக்கூட்டம்

கட்டிபுரண்டு கலவின
ஒருவருக்கொருவர் சலித்தவரில்லை
சாகச பயணத்தில் நாவறட்சியின் வேட்கைக்கு மழைவடிகால்

கருத்தரித்த சுவடுகளின்றி முட்டிமோதி பிரசவித்தன காலுக்கடியில் வகுந்தெடுத்த
வரப்புகளின் பிய்த்தெறியப்பட்ட களைகள்

நாகரிக தீ நாவுகளின் பசிக்கு இரையாதல் அறியாது சபித்தபடி உறங்கிப்போனவன்
பின்னிரவு கனவில் விவசாயம் செழித்தது..



**கி. எல்லாளன்**
வாலாந்தரவை அஞ்சல்,
இராமநாதபுரம் மாவட்டம்

# பப்லு மற்றும் பகீரா

ஒரு அழகான காட்டில் பப்லு எனும் ஒரு சிறுவன் வாழ்ந்து வந்தான். ஒரு நாள் அவன் காட்டுக்குள் நடந்து வந்த போது ஒரு சிறுத்தை அங்கு வந்தது. சிறுத்தை கேட்டது, தம்பி எங்கே போகிறாய்? என்று. அதற்கு சிறுவன் நான் உணவு தேடிப் போகிறேன் என்று கூறினான். உடனே சிறுத்தை, அப்பக்கம் செல்லாதே என்று கூறியது. சிறுவன் ஏன் என்று கேட்க, அங்கு ஒரு சிங்கம் வாழ்ந்து வருகிறது. அங்கே சென்றால் உன்னை அது சாப்பிட்டு விடும் என்றது. சிறுவனும், 'சரி நண்பா, நாம் மரம் மேல் ஏறி பழத்தை பறித்து சாப்பிடுகிறேன்', என்றான். சிறுத்தையும், 'சரி வா நண்பா நான் மரத்தை உலுக்குகிறேன்', என்றது. சிறுவனும் சரி நண்பா என்று சிரித்துக் கொண்டே மரத்தை உலுக்கி பழத்தைப் பறித்து சாப்பிட்டார்கள். அன்று முதல் சிறுத்தையை பகீரா என்று அழைத்தான்.

எழுத்தாளர்
**யோ. யாஷினி**




அன்பு
வடுவூர்

# பசியின் நூறு நிறங்கள்

பால் பழங்களை ருசித்தது இல்லை
ஊட்டச்சத்துக் குறைப்பாடு தொல்லை
பட்டினியே எங்களின் எல்லை
பழங்குடியினர்களின் பிள்ளை
பசி தாங்கிய வயிறோ சிவப்பு

அடக்கு முறைக்கு அடங்கி
வன்முறைக்கு ஆளாகி
அங்கங்கள் அடி வாங்கி
ஏற்பட்ட தழும்போ கருப்பு
நாங்கள் யாரும் மதிக்கா செருப்பு

வடித்த கண்ணீரோ கடல் நீலம்
என் சமூகம் மேன்பட
காட்டுங்கள் பச்சைநிறம்
நீட்டுங்கள் உதவிகரம்
கிடைக்கட்டுமே மின்சாரம்

பிறப்புரிமை இல்ல பிள்ளைகள்
எங்கள் உள்ளமோ வெள்ளை
கிடைக்குமா சமநிலை
இரத்தச் சோகையால் பெண்களின்
மேனியில் படர்ந்ததோ மஞ்சள்

## எதற்குச் சுதந்திரம்

நீ ! ஏழைகளை
ஏறெடுத்தும் பார்க்கவில்லை
தேவைப் பூர்த்தியாகவில்லை
ஏக்கங்களைப் போக்கவில்லை
எதற்குச் சுதந்திரம்

பாரில் குணத்திற்கு மதிப்பில்லை
பலர் நிழலையும் தொடவில்லை
பணம் படைத்தவர்களால்
அதிகாரத் தொல்லை
எதற்குச் சுதந்திரம்

ஆண்டுகள் புரண்டோடியும்
அடிமைத்தனம் ஒழியவில்லை
அடுப்பங்கரையின் அழுகுரலுக்கு
ஆறுதல் கிடைக்கவில்லை
எதற்குச் சுதந்திரம்

மனித நேயம் மலரவில்லை
கருணை வெளிப்படவில்லை
வரதட்சணை வன்கொடுமை
பெண்களை வாழ விடுவதில்லை
எதற்குச் சுதந்திரம்

பெற்ற அன்னையே எல்லை
ஆயினும் முதியோர் இல்லங்களும்,
முதிர்கன்னிகளும் குறையவேயில்லை
எதற்குச் சுதந்திரம்

விடுதலை அடைந்தும் சுகமில்லை
மனதில் மகிழ்ச்சியில்லை
பசிப்போக்க உணவு இல்லை
கல்வி கற்க காசில்லை
எதற்குச் சுதந்திரம்

## கண்ணாடி

கண்ணாடி போல் மனம் இருந்தால்
கண்டறிந்து இருப்பேன்,
நீ அன்பா
இல்லை அம்பா
என்று!

- சை.சபிதா பானு,
காரைக்குடி.
கைப்பேசி: 9159717169

# என் பழைய அலமாரியில்

தூசு தட்டி எடுக்கப்பட்டது
என் பால்ய பருவத்தின்
நினைவுகள்
முதலில் கை சென்ற
ரெக்கார்டு நோட்டுகளில்
படங்களை வரைந்து
தந்த என் அக்காவின்
நினைவுத்தடங்களில்
அவ்வளவு பிரியங்களும்
நிரம்பி வழிந்தது

சில நேரங்களில்
தன் கண்ணாடியை
அரை முக்கில் இறக்கிவிட்டு
முறைப்பார் மாமா

சில நேரங்கள் கண்ணாடி
இல்லாமல் சிரிப்பார்

எப்பொழுதும் காலத்தைச் சுமந்து
செல்லும்
கடிகாரத்தின் சுவடுகளையும்
அதில் மறைந்துள்ள
அன்பான உறவின் நினைவுகளும்
அக்காவின் கைப்பட்டதால்
என்னவோ
ஒவ்வொரு விலங்கும்
கார்டூன் போல்
அன்பாகப் பேசும் சமயத்தில்
அதில் உள்ள பூனைமட்டும்
இப்பொழுதும்
என்னைப் பார்த்து
சிரித்துக்கொண்டிருக்கிறது
மெல்லிய புன்னகையோடும்
ஒரு நீண்ட மௌனத்துடனும்
இன்று என் பிள்ளைகளுக்கு
பயாலஜி ரெக்கார்டு
வரைந்துகொண்டிருக்கிறேன்.

# கணித சமன்பாடுகளோடு

காயும் வெயில்
பெய்யும் மழை
வீசும் காற்றுக்கிடையில்
தவிக்கும் செடிகளின்
வேர்களுக்கிடையில்
ஏற்படுத்தும்
பௌதீக களைப்பால்
அழுதுகொண்டிருக்கும்
வேர்களின்
துன்பங்களை அறியாமல்
உதடுகளும் இதயங்களும்
சொல் களிம்பை தடவி
காற்றில் பறக்கவிட்டு
நீடித்து எழுத முயல்கிறது
சில பொருந்தாத முடிவுகளை.

- ப.தனஞ்ஜெயன்.



# ...ஆராரோ ஆரிராரோ...



வி.முத்துக்குமார்

இருவர் இணைந்து மூன்றாவதாய் மற்றும் அதற்கு மேல் பலர்
வந்து இணைந்து நடந்தால்....
அது குடும்பம்...
அது போல் ஒன்றுக்கு மேற்பட்ட
குடும்பங்கள் இணைந்து வாழ்ந்தால் அது கூட்டுக்குடும்பம்....
இப்படியான பல கூட்டுக்குடும்பங்கள் வாழ்ந்தால் அது ஒரு
சமூகம்....
இப்படியான பல சமூகங்கள் சேர்ந்து வாழ்ந்தால்
அது ஒரு சமுதாயம்.....
ஆம்... பல மொழி பேசும் சமுதாயத்தின் கட்டமைப்பே இந்த நாடு....
பல நாடுகளின் ஒன்றியமே இந்த உலகம்....

ஆம்...
உலகம் என்பது
ஒரு குடும்பத்திலிருந்து உருவெடுக்கிறது..
பிறக்கிறது.....
இந்த உலகம் என்பது ஒவ்வொரு மனிதனின் பிரதிபலிப்பு....

இந்த பிரபஞ்சத்தில் ஒரு குழந்தை எப்படியான சூழலில் வளர்க்கப்படுகிறதோ...
எப்படிபட்ட பெற்றோர்களால் வளர்க்கப்படுகிறதோ....
அப்படித்தான் அந்த குழந்தை இந்த உலகத்தை கையாளும்....
இந்த உலகத்தை அதன் கண்ணோட்டத்தோடுதான் பார்க்கும்.....

இப்படி இருக்கும்பட்சத்தில்
ஒரு குழந்தையின் வளர்ப்பில் பெற்றோரின் பங்கு பெரும்பங்கு....
அவர்கள் பள்ளியில் பயில்வதெல்லாம் வெறும் ஞானத்தின் பாகுபாடுகள்தான்...

பாசம்...
சகோதரத்துவம்...
நட்பு..
உறவு...
கருணை...
அன்பு..

இதெல்லாம் குடும்பத்தில்தான் கற்றுக்கொள்கிறார்கள்..
குடும்பம் எப்படி ஒரு குழுந்தைகளிடம் பிரதிபலிக்கிறதோ...

அப்படியேத்தான் இந்த உலகத்திடம் அவர்கள் பிரதிபலிக்கிறார்கள்....

நீ இதைக்கொடுத்தால் நான் அதைக்கொடுப்பேன் என்று சொல்லி வளர்க்கும் பட்சத்தில் தொடங்குகிறது அந்த குழந்தையின் பண்டமாற்று அறிவு.....

குழந்தைகள் கண்ணாடி போல் தான் நம்மை பார்க்கிறார்கள்...
நாம் எப்படி அவர்களிடம் பிரதிபலிக்கிறோமோ...
அதையேத்தான் அவர்களும் பிரதிபலிப்பார்கள்....

ஏதாவது ஒரு விஷயத்திற்கு பெற்றோர்கள் கோவப்பட்டால்...
அதே விஷயத்திற்கு அந்த குழந்தையும் கோவப்பட வேண்டும் என்று கற்றுக் கொள்கிறது...
சொல்பேச்சி கேளாது என்று அடிக்கும்போது...
அந்த குழந்தையின் பேச்சை யாரும் கேட்கவில்லையென்றால் அது மற்றவர்களைத் தாக்கும் வன்முறையை கையாள்கிறது....
இங்கே வன்முறை சொல்லிக்கொடுப்பது பெற்றோர்கள் தான்....

ஒரு குழந்தை சிறந்து விளங்க காரணம்,
அந்த பெற்றோர்கள் தான்...
குழந்தை வளர்ப்பில் அவர்கள் அக்கறை செலுத்துவது அவர்களின் தலையாயக் கடமை....

இந்த விஷயத்தை அவர்களிடம் சொல்லாதே..
நம்மிடம் இருப்பதை அவர்களிடம் சொல்லாதே..
நீ வைத்திருப்பதை யாருக்கும் தராதே என்று சொல்லிக் கொடுக்கும்போதுதான்..
தான்...
தனக்கு மட்டும் தான்..
என்றவொரு பிடிவாத குணமும்..
பொய் சொல்லவும் கற்றுக்கொள்கிறார்கள்....

குழந்தைகளுக்கு வாழ்க்கை என்றால் என்னவென்று சொல்லிக்கொடுங்கள்....
வாழ்க்கையை அவர்கள் வாழ்ந்துக் கொள்வார்கள்....

ஆனால் இங்கு நிறைய பெற்றோர்களுக்கு வாழ்க்கை என்பது என்னவென்றே தெரியவில்லை....
சில பெற்றோர்கள்
தன் சந்தோஷம், தன்னோட நலம் பற்றித்தான் சிந்திக்கிறார்கள்...
அப்படியான சூழலில் ஒரு குழந்தை வளரும் என்றால் பிற்காலத்தில் அந்த குழந்தை ஒரு தன்னலப் பேர்வழியாகத்தான் வளரும்.....

ஈன்றப் பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனை சான்றோன் எனக் கேட்டத்தாய்...
ஒரு குழந்தை சான்றோன் ஆவதும்..
சாக்கடையாவதும் பெற்றோர்கள் கையில்தான்.
ஒரு குழந்தை சிறந்து விளங்க பெரிதும் உதவுவது தாயின் பாசமும் தகப்பனின் அறிவும்தான்....

குழந்தைகளுக்கு பொதுநலத்தை சொல்லிக்கொடுங்கள்..
பெருந்தன்மையை சொல்லிக்கொடுங்கள்...
உறவுகளைப் பற்றி சொல்லிக் கொடுங்கள்..
உறவுகளிடம் பேச வையுங்கள்....
உங்கள் பரம்பரை என்னவென்று சொல்லிக்கொடுங்கள்...
(இங்கு சாதிகளை சொல்லி வளர்க்காதீர்கள்)
எல்லா மனிதர்களையும் நேசிப்பது எப்படி என்று கற்றுத்தாருங்கள்....
எல்லா உயிர்களிடத்தும். கருணை செய்ய சொல்லி வளருங்கள்...

குழந்தைகளிடம் கனிவாக நடத்துங்கள்...
கோபப்படாதீர்கள்....

குழந்தைகளின் முன் செய்யக்கூடாதவை

1.சண்டையிடக்கூடாது...
2.கோவப்படக்கூடாது....
3.கணவன் மனைவி அன்னோன்யம் காட்ட கூடாது....
4.குழந்தைகளிடம் கொஞ்சிப்பேசவும்....
சில நேரங்களில் கெஞ்சியும் பேசவும்...
5.குழந்தைகள்மேல் சலிப்பைக் கொட்ட கூடாது...
6. எந்நேரமும் திட்டிக்கொண்டே இருக்கக்கூடாது...
7.வெகுநேரங்களாய் கழித்து குழந்தைகளை பார்க்கும்போது கனிவாய் பேசுங்கள்...
வாரித்தழுவுங்கள்....

உங்கள் கனவுகளை அவர்கள் மேல் திணிக்காதீர்கள்...
உங்கள் கனவை சொல்லுங்கள்..
அதிலிருக்கும் நியாயத்தையும் பலனையும் சொல்லுங்கள்...
அவர்கள் புரிந்துக் கொள்வார்கள்...
அதன்பிறகு அதை நிச்சயமாய் ஏற்றுக்கொள்ளாமல் போகமாட்டார்கள்....
ஏற்றுக்கொள்ளாமல் போனால் விட்டுவிடுங்கள்...
வலுக்கட்டாயமாக
திணிக்காதீர்கள்...

இப்படி இன்னும் நிறைய விஷயங்களை பார்த்துப் பேசுங்கள்...
பார்த்து நடைபோடுங்கள்....
உங்களின் ஒவ்வொரு செயல்பாடும் உங்கள் குழந்தைகளின் வெளியுலக பிரதிபலிப்பின் கருப்பொருள்கள்தான்....

பிள்ளைகள் வரம் கிடைக்கப்பெறாதவர்களிடம் சிறிதுநேரம் பேசிப்பாருங்கள்....
அந்த வலியை உணர வேண்டாம்,
குறைந்தபட்சம் யோசித்துப் பாருங்கள்.
இவ்வளவு ஏன் ஒரு குடும்பம் சரியாக அமைய பெறாதவர்களிடம் கேட்டுப்பாருங்கள்.
அந்த வலி புரியும்.
பிள்ளை பெறாதபோது...
இன்னும் பிள்ளை பிறக்கவில்லையே என்று அழுத நினைவை எல்லாம் நினைத்துப் பாருங்கள் ..
அவர்கள் நடந்து வரும் அழகை ரசியுங்கள்...
அவர்கள் பேசும் தருணங்களை மனதில் ஏற்றி அவ்வப்போது நீங்களே பேசி சந்தோஷத்தில் சஞ்சரித்துக் கொள்ளுங்கள்.....

யாருக்கும் எளிதில் கிடைத்திடாத ஒரு வாழ்க்கை இந்த இல்லற வாழ்க்கை.
உங்களுக்கு கிடைத்திருக்கிறது....
வளமாய் வாழ பழகுங்கள்...

பிள்ளைகளைவிட வேறெந்த விஷயமும் பெரிதல்ல. பிள்ளைகளைவிட வேறெதுவும் உலகமில்லை...
ஆம்.. இவ்வுலகம்தான் பிள்ளைகள்...
பிள்ளைகள்தான் இவ்வுலகம்....

நம் பெற்றோர்கள் தன்னலம் பார்த்து வாழ்ந்து வளர்த்திருந்தால்..
இன்று நாம் நாமாக இருந்திருக்க மாட்டோம். ஏதோவோர் மூலையில் எங்கோ ஓர் ஓரத்தில் சீரழிந்துக் கொண்டிருந்திருப்போம்.

உங்கள் குழந்தைளை
இல்லை. உங்கள் உலகத்தை பத்திரமாய் பார்த்துக்கொள்ளுங்கள்.

அன்பு, நட்பு, பாசம் எல்லாம் சொல்லிக்கொடுங்கள்.
கோபத்தின்போது நீங்கள் பேசாத போது உங்கள் குழந்தைகளும் பேசக்கூடாது என்று நிர்பந்திக்காதீர்கள்.
உங்களின் விருப்பு வெறுப்புகளை அவர்களின் மேல் திணிக்காதீர்கள்.

மொத்தத்தில் குழந்தைகளை குழந்தைகளாகவே வாழ விடுங்கள்.
குழந்தைகளோடு இருக்கும் பொழுது குழந்தைகளாகவே மாறிவிடுங்கள்.

அன்பின் மொழியிலேயே பேசுங்கள்.
பாசத்தை சுவாசம் போல் வீசுங்கள்.

உங்கள் பெற்றோரை நீங்கள் மதியுங்கள். உங்கள் பிள்ளைகள் உங்களை மதிக்கும்.
உங்கள் பெற்றோரை நீங்கள் பேணிக்காத்து கொள்ளுங்கள்.

உங்கள் பிள்ளைகள் உங்களை பேணிக்காத்துக்கொள்வார்கள்.

அறுபது கோடி சொத்துக்கள் சேர்த்தாலும், ஆயக்கலைகள் அறுபத்துநான்கும் கற்று தேர்ந்தாலும் பெற்றோர்களாய் இருந்து செய்யும் கடமையும் பெற்றோர்களுக்கு செய்யும் கடமையும் மறந்து வாழ்ந்தால், மனிதன் என்ற மாபெரும் பொருளை இழந்தவர்களாகிறோம்....

- வி.முத்துக்குமார்



Y. யாஷினி
3rd Grade
SBM Jay Tech International School

# என்றும் புதுமை

ஆயிரம் விடியலில் ஆதவனைப்
பார்த்தாலும்
அதன் அழகு சலிப்பதில்லை,
அப்படித்தான்
அவளும் பூப்படைந்த புதுமலராக
நித்தம் வதைக்கிறாள்..

## உழவு

கோடைய விரட்டி
ஆடியிலே நல்லேறு கட்டி
புஞ்சையில் பதிக்க
மண்பொங்கி மலர்ந்து விரிய
மழை மேகம் மயங்கி
மண்ணில் விழும்.

## அழகு

கடைக்கண் சிரிக்க
இமைகள் வெளிப்படுத்த,
அவள் புருவங்கள் அப்படித்தான்
ஒத்துழைக்கிறது.
பனி விழும் மலர் இதழின் அசைவாக.

## மையல்

இதழ் பிரித்து வார்த்தையில் சொல்ல
வேண்டாம்.
இதழ் பதித்து உணர்வாய்
வெளிப்படுத்து!!

## பேச்சு போதை

கதிரவனைக் கண்டு மொட்டு வெடித்து
மலர்வது
போன்றுதான்!
அவள் பின்னிரவு பேச்சும்.

## பசி

காய்ந்து கிடந்த உடல் அருகே
காட்டுத்தீயாக சென்றான் போல,
பற்றிக்கொண்டு எரிந்து
அடங்கிவிட்டாள்!

## தோழமை தோல்வி

கொண்ட நட்பின்
நம்பிக்கை முறியும் போது!
நகரும் நாட்கள்
நம்பிக்கையற்று போகும்

மனோ குணசேகரன்,
புள்ளவராயன் குடிக்காடு.



# ஒரு வேளை உணவிட்டதற்காக

ஐந்து வருடமாய் வெயிலிலும்
மழையிலும் காவல் காக்கிறது...
நாயொன்று,
ஓட்டுப்போட்ட மக்களை
மறந்த,
அரசியல்வாதியின் வீட்டு வாசலில்!

✸✸✸

சாலையோரத்தில்
தன் உடலை
சாட்டையால் அடித்து
காயப்படுத்திக்கொண்டவன்,
சிந்திய ரத்தத்துளிகள் கருணையாக்கிக்
கொள்கிறது
காசாக்கிக் கொள்கிறது
கண்ணீராக்கி
கொள்கிறது,
அவனைக் கடந்து வீடு செல்லும்
நான்
கவிதையாக்கிக் கொள்கிறேன்...
குருதி படிந்த என்
வெள்ளைக்காகிதத்தில்!

✸✸✸

அலைபேசி பழுதடைந்த
நாளில்
பூந்தோட்டத்தில்
வண்ணத்துப்பூச்சி,
எத்தனை அழகு!

-✸✸✸

பக்கமாய் விமானம் பறந்து
போகும் போதெல்லாம்
வீட்டுக்குள்ளிருந்து
வாசல் ஓடிவந்து ஆகாயம்
பார்க்கும்
ஒவ்வொருவருக்குள்ளும்
ஒளிந்திருக்கிறது...குழந்தை மனது!

✸✸✸

மகனின் பெயர்
நாளிதழ்களில்
ஏதோ ஒரு மூலையில்
சிறிதாக வந்தாலே கொண்டாடும்
அம்மா,
மரணத்தில்
தலைப்பு செய்தியாகிய மகன்,

✸✸✸

நெரிசல் மிகுந்த சாலையில்
வாகனமொன்றில் அடிபட்டு
உயிருக்கு போராடிக்கொண்டிருந்த
நாய்க்குட்டி,
பார்த்தும் பார்க்காதது கடந்து
வீட்டுக்குள் நுழையும் போது
விரலை பிளேடால்
கிழித்துக் கொண்டு அழும்
மகளிடமிருந்து
உதிரும் ஒவ்வொரு துளி ரத்தமும்
அழ வைக்கிறது...
இப்போது
நாய்க்குட்டிக்கும் சேர்த்து !

✸✸✸

தவறி
விழுந்து விட்ட
குழந்தையை மீட்க,
நீச்சல் தெரியாமலே
குதித்து விட்ட
தாயினுடைய அன்பின்
ஆழம்
அதிகமாகத் தான் இருந்தது...
கிணற்றின் ஆழத்தை
விட!

✸✸✸

ஞாபக மறதி என அப்பாவின்
வார்த்தைகளால்
பதம் பார்க்கப்படும் அம்மா,,
இதுவரை மறந்ததில்லை
வளர்க்கும்
நூற்றுக்கணக்கான
ஆட்டுக்குட்டிகளின் பெயரை!

✱✱

யாரென்று தெரியவில்லை
எப்படியென்று
அறியவில்லை
எந்த ஊர் என
கேட்கவில்லை...
கீஜக
என்ற ஒற்றை வார்த்தையில்
கடந்து கொண்டிருக்கிறோம்...
ஒவ்வொரு மரணத்தையும்!



மு.முபாரக்

---

# விடியல்...! ?

வெளிச்சம் நீங்கி
இருள் சூழும்...?
நிலவு எதிர்த்து போராடும்.... !
நிலவை மறைக்கும்
மேகங்கள்.... ?
கலைய வைக்கும்... !
காற்றின் சீற்றம் ...!?

நேரங்கள் கரையும்.
விடியலை நோக்கி....!

வசந்தம் தேடும் மனசு....!
சுகந்தம் தேடும்
வண்ணத்துப் பூச்சிகள்... !
சிறகடித்துப் பறக்கும்... !?
பூக்களின் மேல் -
பனி உருட்டி விளையாடும்.. !?
விடியல் கான
துடிக்கும்... !?

பறவைகளின் சுப்ரபாதம் கேட்டு..
நடுங்கும் குளிரை
துளைத்து ...!
பூமியில் -
கதிர்களை பரப்பும்
காலைக் கதிரவன்... !

பிரகாசமாகும் பூமி..... !
பரவசமாகும் உயிரினம்....!?
ஒவ்வொரு இரவும்....
நாளைய விடியலுக்கே..!?



- முனைவர். சா.சம்பத்
தேசிய பயிற்சியாளர்,
மன்னார்குடி

# வண்ணத்தின் நிறம் அழுக்கு

**கண்ணைக்கவர்ந்து**
பளபளப்பாய் மின்னும்
அற்புதங்கள் யாவற்றிலும்
சடலமாய்  புதைந்திருக்கின்றன
உழைப்பின் அழுக்கான வண்ணம்!

**மரங்கள் கைவிட்ட**
உதிர்ந்த சருகுகளை
உயிரூட்டி விளையாடுகிறது
காற்றின் குழந்தை விரல்கள்!

**அழுகும் நாற்றம் மெல்ல கசிந்து**
புதைந்துகொண்டிருக்கும்
அச்சடலத்தின் அருகில்
வாழ்நாள் சேமித்த
பெருமைமிகு மற்றும்
சிறுமைமிகு யாவும்
வார்த்தைகளாய் புதைந்திட
வீடுதிரும்பும் யாவரின் பின்னும்
கூரிய நகங்களோடான விரல்களை
இரகசியமாய் நீட்டி
அரவமின்றி தொடர்கிறது
மரணத்தின் புடைத்த கரங்கள்!

**மழை ஜனித்திடா வானத்தைத்**
தன்னைவற்றிப் பழிவாங்கும்
கரைமண் களவுபோன குளம்
நீருக்குள் வாழ்ந்த வானத்தைத்தேடி
எங்கோ பறந்துசெல்லும்
மீன்கொத்திகளும்
நாரைகளும்
ஆழத்தில் புதைந்து
தாமரையும் ஆம்பலும்
யார் வரவிற்காய் காத்திருக்கும்
உயிர்ப்போற்றி?



**பொன். தெய்வா**
ஐவேலி, விழுப்புரம் மாவட்டம்.

# தெப்பக்குளத் திருவிழா

கண்ண பறிக்கும் கலர் ரிப்பன்
காத்துக்கு பின்னல் போடும்...
மரத்தட்டு பதிச்ச அருகாமனைக்கு
அசலூர் ஜனம் ஆர்ப்பரிக்கும்

மஞ்சக்கயிற கட்டிப்பிடிச்சிருக்கும் குங்குமப் பொட்டலத்த நெறஞ்ச வகுடு குனிஞ்சித் தேடும்

மிளகா பஜ்ஜி எண்ணெய்ல குளிக்கிறத பாக்கவிடாம வான வேடிக்கை திசை திருப்பும்...
பஞ்சாயத்துல பத்திரம் பிரிச்ச பங்காளிங்க கூட்டம் முறுக்கிக்கிட்டு நிக்கும்

முறுக்குக்கடையோரம் மூத்த மருமக கொழுந்தன் பொண்ஜாதி நெறஞ்ச வயிறுக்கு ஊம பாஷையில மாச கணக்கு கேட்கும்

அய்யன் தோள் மேல உட்காந்திருக்கும் அஞ்சு வயசு பிள்ளைக்கு பலூன் காரன் தரிசனம் கிடைக்கும்

மீன் குழம்புல ஒட்டு மாங்கா தேடுற குழிக்கரண்டிப் போல கூட்டத்துக்கு நடுவுல அரும்பு மீச அத்த மவள தேடும்

அர டசன் அரக்கு கலர் வளையலுக்கு அத்தான் சட்ட பையிக்குள்ளார அக்காகாரிங்க விரல் அதிகாரம் காட்டும்

குச்சி ஐஸ்க்கும் குடை ராட்டினத்துக்கும் குறிப்பிட்ட வயசுதான்னு கேலி செய்றதுக்குன்னே ஒரு கூட்டம் திரியும்...
என் அண்ணனுங்க காதுல விழுந்தா அவனுங்க கணுக்கால் முறியும்

இது அத்தனையும் என்னோட முடிஞ்சிடுமோங்குற பயம் மனச நெருடும்...
வேட்ட கருப்பனுக்கும் ஐய்யனாருக்கும் பெரிய வேண்டுதலாம் வைக்கல
என் பிள்ளைகளுக்கும் தெப்பக்குளத் திருவிழாவ காட்டனுங்குறத தவிர.....

--
மகாலெட்சுமி இராமலிங்கம்
திருத்துறைப்பூண்டி

# நிறமற்ற உலகில் நான் ஓவியன்

என் வாழ்வில் வர மாட்டாயா
என ஏங்க வைத்ததும் நீ
இப்பொழுது வரமாய் வந்ததும் நீ.....!

உன் விழியோடு உரையாடும்
கவியாக நான் மாற
என் மனதோடு மன்றாடுதே
என் இதயம்..!

விண்ணோடு மண்பேசும்
மொழியாக வந்தாய்!
மொழியிலே தேன்பொழியும்
முத்தமிழுக்கு முரணாக,
காதல்மொழி மௌனமொழி
பேச நீயும் வந்தாய்!

என்னுள் உன்னையும் தேடி,
உன்னுள் என்னையும் தேடி!
இருவரும் தொலையும்
ஆட்டமுமாடி ஆட்சி செய்ய
வந்தாய்....!

நம் காதல் பாகத்தில்
என் வேடிக்கைகளும்,
உன் குறும்புகளுமே
நேசத்தின் வெளிப்பாடாய்
மோகம் கொள்கிறதே
என் கண்ணாளனே..!
நம் வாழ்கை எனும்
அத்தியாயத்தில்
முதல் பக்கத்தில்
இன்று நீயும் நானும்...!

இனிவரும் இரவுகள் எல்லாம் நிறமற்று
இருந்தாலும்,
என் நிலவை பௌர்ணமி எனும்
ஓவியமாக்கி
ஒளியாக்கி மகிழ்வேன்..
ஆம் என்னவன் தான் அந்த ஒற்றை
நிலவு!
நிறமற்ற வானுலகில் நான் ஓவியன்!...

கொஞ்சம் அன்பு;
கொஞ்சம் அக்கறை;
கன்னம் சுருங்கி கால்கள் தள்ளாடும்
வயதிலும்
நீரில் பற்றி எரியும் காதல் ஓவியமாய்
பூர்த்தியாகும்
இப்பேரின்ப பெருவாழ்வு ...!



--

பொன்மணி தர்மராஜன், BE.,
பரவாக்கோட்டை.

## என்னை எடுத்துச் செல்ல

வந்திருக்கிறார்கள்.
அவர்களிடம் வரமாட்டேன்
எனும் தர்க்கத்தில் இருக்கிறேன்.

எனக்கு போக விருப்பமில்லை
எனினும் அவர்கள் என்னை
விடுவதாயில்லை.

வெளிச்ச முகத்தை கழற்றிவிட்டு
இருளப்பிய முகத்தோடு என்னை
வழியனுப்ப காத்திருக்கின்றனர்
சுற்றமும் நட்பும்.

யாருக்கும்
எந்த தொல்லையுமின்றி
என் இல்லத்தின் ஒருமூலையில்
இயல்பாய் இருந்து கொள்ள
சம்மதிக்கிறேன்.
அவர்கள் ஒப்ப மறுக்கிறார்கள்.

என்னை வெறுத்து
ஒதுக்கியனுப்பும் காரணத்தை
அப்போது அவர்களிடம்
ஆவலுடன் கேட்கிறேன்.
குழுவாய் அழுது கூக்குரல்
வைக்கிறார்கள்.

மொத்தமாய் இயக்கமற்றிருக்கும்
என்னை வாழ்க்கையின் மீதி
எதற்கும் உதவாத ‘‘பிணம்’’
என்கிறார்கள்.

## நான் தனிமையில் இருப்பதை

உங்களைப்போலவே
யாரிடத்திலும் நானும்
சொல்லிக் கொள்வதில்லை.

அவ்வமயம் என்னை
நல்லவனென்று பலமுறை
சொல்லி இருக்கிறது மௌனம்.

தினந்தோறும்
நடுக்கடலின் பேரமைதியை
தனியே ரசிக்கிறது இரவுநிலா.

ஒவ்வொரு வினாடியும்
ஒவ்வொரு உயிரையும் சப்தமின்றி
பூரணமாய் தரிசிக்கிறது காற்று.

மண்ணுக்குள் உறங்கும் விதை
மௌனமாய் பூமியைப் பிளக்க
தலை நீட்டுகிறது தளிர்.

மனிதர்களின்
அம்மணங்களை பார்க்கும் இருட்டு
நிசப்தத்தை
துறந்து நெடுநாட்களாயிற்று.

பெட்டகங்களில் உறங்கும்
பொன்னும் பொருளும் அகிலம்
கண்டது ஆதியில்.

நீ எதற்கும் சலனப்படாமல்
இப்போதும் எப்போதும் இருப்பதே
உத்தமம்.



பாரியன்பன் நாகராஜன்
குடியாத்தம் - 632602
அலைபேசி: 9443139353.

# பெண்ணுக்குள் ஞானம் வைத்தான்

தாய்மையின் சிறப்பினையை,
தன்னலமற்ற பொறுப்பினையை
மண்ணுலகில் விதைத்திடவே
விண்ணளவில் விரித்திடவே
பெண்ணவளில் ஞானம் வைத்தான்...

தனித்திறமை அத்தனையும்
தனக்குள்ளே பூட்டி வைத்து
தலைமுறைகள் சிறந்திடவே
தானமாய் தனை அளிக்கும் - இவளுள்
ஞானத்தையும் தான் விதைத்தான்...

ஆசைகள் அத்தனையும்
ஓசையின்றி செய்து விட்டு
அம்மா என்ற வார்த்தைக்காக
அவளையே அர்ப்பணித்து
குவலயம் அதுவாக
குடும்பம் அதை கருதி
வானம் போல் வாழ்ந்து வரும்
வஞ்சனி இவளுக்காய்
ஞானத்தையும் தான் விதைத்தான்...

பூப்படையும் காலம் முதல்
பூ முடிக்கும் காலம் வரை
மூப்படைந்து போனாலும்
களைப்படையா இவள் சேவையினால்
வியப்படைந்த ஆண்டவனும்
மதிப்புடைய ஞானத்தை - நல்
மங்கைக்குள் வைத்தானோ?

--
சுவாதி குணசேகரன்

# அம்மா

உன் உதிரம் கொடுத்து சுவாசம் தந்தாய்
உன் துயிலை தொலைத்து பாசம் தந்தாய்!

கடுகளவு துயரம் நான் பெற்றால்
என் கண் துடைக்கும் கைக்குட்டை
நீயம்மா!

உன் முந்தானையில் என் முகம்
துடைத்த நிகழ்வுகள்
என் மூளைக்குள்ளே இன்னும் முத்தங்கள்
கொடுக்குதம்மா!

பசி உறக்கம் தொலைத்து பத்து மாதம்
கலைத்து பாருக்கு என்னை கொடுத்தாய்,
உன் பாச வேருக்கு நான் எதை கொடுத்து
ஈடு செய்வேன்!

உளி தொட்ட சிலையாய் உன் பாசத்தால்
என் உயிர் தொட்டா மழையாய் நீ!

உன் தியாகத்திற்கு என் கண்ணில் நீர்
வற்றும் வரை அழ வேண்டும்
உன் பாசத்திற்கு என் உயிர் இருக்கும் வரை
உன்னை காக்க வேண்டும்.

எனக்கு நித்திரையை கொண்டுவர உன்
நித்திரைக்கும் நித்திரை கொடுத்து
நிம்மதியும் சேர்த்து தொலைத்து நிலவு
ஒளியையும் துணைக்கழைத்து நிழல்போல்
நின்று என்னை காத்தவளே!



க. அன்பழகன்,
வடுவூர்

# துளிப்பாக்கள்

மின்னதிர்வை ஏற்படுத்துகிறது
மின்கட்டண உயர்வு
குடிசையில்

கொட்டும் அருவி
சலனமின்றிக் கிடக்கிறது
வரவேற்பு அறையில் ஓவியம்

அனைத்தும் திருடுபோனது
அப்படியே கிடக்கிறது
புத்தகங்கள்

உரசி உரசி
பேசிச் சென்றன
எதிரெதிரே எறும்புகள்

இறந்தவன் மீண்டும்
உலகைப் பார்கிறான்
கண்தானம்

வானமே குனிந்து
தலை வணங்குகிறது
நாற்று நடும் வயல்

முதலில் நடிகை
கடைசியில் நாட்டுக்குழைத்தவர்கள்
ஒதுக்குகிறது செய்தித்தாள்

உயிர் பெறுகிறது
குழந்தைகளிடம்
மாறுவேடம்

மலை உச்சி
மேலெழும்புகிறது
அரிக்கும் மனம்



பெ. விஜயலட்சுமி
Peviutr@gmail.com
6380704001



ஓவியம்
நிரஞ்சனா



# ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளில் காதல்
## - இளையோரின் சிந்தனைத் தூண்டலுக்கான ஒரு தேடல்

அறிமுகம்
காதல் என்பது மனித இனம் தோன்றியதிலிருந்து இன்றுவரை வெவ்வேறு புரிதலுடன் அதன் அர்த்தங்களுடன் இயங்கிக் கொண்டிருக்கும் உணர்வுபூர்வமான ஒரு பதம் ஆகும். காதல் என்ற பதத்தை இன்றுவரை எவராலும் சரியாக வரையறுத்துக் கூற முடியாதிருப்பினும் விஞ்ஞானிகள் மூளையில் சுரக்கப்படும் ஓமோனின் தூண்டுதலால் ஏற்படும் நடத்தை மாற்றமே காதல் என்கின்றனர். இவ் நடத்தை மாற்றமானது இன்று ஆண் - பெண் இருவருக்கிடையில் மலரும் அன்பு, ஈர்ப்பு, அக்கறை, உணர்வு ஆகியவையாகவே பெரிதும் எம்மவர் மத்தியில் நோக்கப்படுகின்றது.

எதிர்ப்பால் கவர்ச்சியின் உந்துதல் காரணமாகவும், இருமனங்கள் ஒன்றிணைந்து இல்லறவாழ்வில் கடைசிவரை வாழ்வதற்கும், தங்களுடைய இளமை உணர்வுகளை பரிமாறிக் கொள்ளவும் காதலிக்கின்றனர். இன்றைய சமூகத்தில் காதல் அதன் உணர்வுகள் பாடசாலை முதல் பல்கலைக்கழகம் வரை, இலக்கியம் முதல் சினிமா வரை என அனைத்து இடங்களிலும், துறைகளிலும் பேசுபொருளாக மிளிர்கின்றது. இன்று சமூகத்தின் ஒவ்வொரு உறுப்பினரையும் பாதித்துள்ள காதல் அச்சமூகத்தின் உற்பத்தியாக விளங்கும் இலக்கியங்களிலும்  யதார்த்தப்பூர்வமாக சித்திரித்துக் காட்டப்பட்டுள்ளது.

ஈழத்துத் தமிழ்ச்சிறுகதைகளிலும் காதல் உணர்வு, அதன் ஏமாற்றம், அதன் சாதக  பாதக விளைவுகள் குறித்து பல படைப்பாளிகள் தமது படைப்பிலக்கியங்களில் சுட்டிக் காட்டியுள்ளனர். அவ்வகையில் ஈழத்தில் வடபகுதியை வாழ்வெளியாக கொண்ட புயல், பெ.ஸ்ரீகந்தநேசனின் சிறுகதைகள் காதல் என்ற உணர்வையும் அதனால் இளையோர் வாழ்வில் ஏற்பட்ட விளைவுகளையும் யதார்த்தப்பூர்வமாக வெளிப்படுத்தியுள்ளன. இவரது படைப்பிலக்கியத் தொகுதிகளான 'செழிப்பைத் தேடும் பறவைகள்'இ 'காகங்களும் மைனாக்களும்' ஆகியவை முறையே 2005, 2006 ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்ட சிறுகதைகளாகும்.

யுத்தகால சூழலில் படைப்பாக்கம் பெற்ற இச்சிறுகதைகள் இன்று யுத்தம் முடிவடைந்து பதினொரு வருடங்களை கடந்துள்ள வேளையிலும் நம்மை சிந்திக்கவைத்துள்ளது. ஒரு குறிப்பிட்ட கால சமூக உற்பத்தியாக வடிவம் பெறும் இலக்கியங்கள் அக்கால சமூகத்தை தெளிவாக பிரதிபலித்துவிடுகின்றன. சமூக ஆவணங்களாகவும் பதிவாகின்றன. இச்சமூக ஆவணங்களை மீள்வாசிப்புச் செய்யும்போது அதே சம்பவங்களும், பிரச்சினைகளும் தற்கால சமூகத்தில் ஆவணமாக்கப்படாத பிரச்சினைகளாக நடமாடிக் கொண்டிருக்கின்றன. அவ்வாறான பிரச்சினைகளை ஆவணமாக்கப்பட்ட இலக்கியங்களிருந்து எடுத்துநோக்குவதும், அவற்றை தற்காலச் சமூகத்துடன் பொருத்திப்பார்ப்பதும், அவற்றினூடாக இன்றைய சமூகத்தை சிந்திக்க

வைப்பதும் ஒரு ஆய்வாளனின் இன்றியமையாத கடப்பாடாக அமைகின்றது. புயல் அவர்களால் படைப்பாக்கம் பெற்றுள்ள சிறுகதைகள் காதல் தோல்வியினால் இளையோர்களின் வாழ்க்கை எவ்வாறான அவலநிலைக்கு சென்றுள்ளது என்பதை மாத்திரம் கூறிவிடாது அவற்றிலிருந்து விடுபட்டு வாழ்வை எவ்வாறு இலட்சியப் பாதைக்கு இளையோர் கொண்டு செல்லவேண்டும் என்பதையும் சிந்திக்க வைத்துள்ளது. அவ்வாறு சிந்திக்க வைத்த ஐந்து சிறுகதைகள் மாத்திரமே இக்கட்டுரையினூடாக நோக்கப்படுகின்றது.

’காகங்களும் மைனாக்களும்’ என்னும் சிறுகதை தொகுதியினூடாக பதிவாகியுள்ள ’சமுதாயம் ஏற்குமா’, ’நீ என் காதலிமட்டுந்தான்’ ஆகிய சிறுகதைகள் இரண்டும் காதலித்து தோல்வி அடைந்த ஆண் - பெண் இருவரும் எவ்வாறு சிந்தித்துள்ளனர் என்பதை தெளிவுறுத்துகின்றது. ’சமுதாயம் ஏற்குமா’ என்னும் சிறுகதை குமார் என்னும் இளைஞனின் காதல் தோல்வியையும் அதற்கான காரணத்தையும் யதார்த்தப்பூர்வமாக சித்திரிக்கும் அதே தருணம் தத்துவரீதியாகவும் படைக்கப்பட்டுள்ளது. இதனை குமார் தன்னுடைய நண்பன் ராகுலிடம் உரையாடும்போது கூறிய உரையாடல் பகுதி வெளிப்படுத்துகின்றது.

‘... நீ ஆசைப்படுகிற நா காதலிச்ச பிள்ள என்னவா இருக்குதுன்னு சரி அவளும் நானும் காதலிச்சது உண்மை. ஆனா இரண்டு பேரும் ஒவ்வாத முனைகள் மச்சான். அவள் மச்சான் தமிழின் பாரம்பரியத்தில் ஊறித்திளைத்தவள். நான் அப்படி இல்ல. நான் இயன்ற அளவுக்கு நவீனத்த உள்வாங்கிக் கொள்பவன். அதால இரண்டு பேரும் சம்மதத்துடன் பிரிஞ்சிட்டம். அவளுக்கு திருமணம் நடந்து இரண்டு பிள்ளையும் இருக்கு மச்சான்... இரண்டு பேரும் சரிவராது பிரிஞ்சம் அவளும் கவலைபடாம திருமணம் செய்து கொண்டாள். நானும் சந்தோஷமாக இருக்கிறன்... என்ன பொறுத்தவரையில எனக்கு இப்ப காதலிக்கிறதுக்கு நேரமே கிடைக்கிறதுயில்ல மச்சான்...’ (புயல், 2006, பக்.12)

இவ்வாறு குமார் என்னும் பாத்திரம் முற்போக்குச் சிந்தனையுடன் மிக இலகுவாக காதல் தோல்வியை பற்றி குறிப்பிடுவதை காணமுடிகின்றது. இன்று எமது சமூகத்தில் காதல் என்பது பெரும்பாலும் வெறும் உணர்ச்சியுடன் சம்பந்தபட்ட ஒரு விடயமாகவே இருந்துவருகின்றது. விரல்விட்டு எண்ணக்கூடிய வகையில் உண்மையான காதலர் வாழ்ந்தாலும் காதல் தோல்விகளே அதிகம். சிலவேளைகளில் காதல் தோல்வி ஏற்பட்டால் தற்கொலை முயற்சிகளில் ஈடுபடுகின்றவர்களையும் காண்கிறோம். இல்லாவிடின் ஒரு பெண் தான் காதலித்த ஆணை ஏமாற்றிவிட்டால் அந்த ஆண் அவள் மீது வன்முறைகளை கையாள்வதை இன்று நடைமுறையில் பல சம்பவங்கள் நிதர்சனப்படுத்தியுள்ளன. எனினும் இச்சிறுகதையில் வரும் காதல் என்ற பதம் இருவரின் அனுமதியுடன் பிரிவையும் அவரவர் வாழ்க்கையின் வழியில் பயணிப்பதற்கும் வழிசமைத்துள்ளது.

காதல் இருவரின் உள்ளம் தொடர்பான புரிதல். இச்சிறுகதையில் வரும் குமாரும்

அவனது காதலியும் ஒவ்வாத முனைகள் என அவனே குறிப்பிடும்போது அது உண்மையான உள்ளம் சம்பந்தபட்ட காதல் இல்லை என்பதையும் இவ்விடத்தில் சிந்திக்கவேண்டியுள்ளது. ஒருவரை புரிந்து ஒருவர் வாழ்வதற்கும், விட்டுக்கொடுத்து வாழலாம் என்பதையும் உணராது பிரிந்துவிடுதல் காதலின் பின்னால் இருக்கின்ற பொய்மையாகவே எண்ண வைக்கின்றது.

இச்சிறுகதை தொகுதியில் படைக்கப்பட்டுள்ள 'நீ எனது காதலி மட்டுந்தான்' என்னும் சிறுகதை காதலின் பின்னுள்ள ஏமாற்றத்தையும் பணம்தான் காதல் என்பதையும் ஒருவர் மீதுள்ள கவர்ச்சியினாலேயே காதல் மலர்ந்து மீண்டு வாடிவிடுகின்றது என்பதையும் சித்திரிக்கின்றது. கந்தன் என்னும் இளைஞன் காவ்யா என்னும் பெண்ணை தரம் பத்தில் கல்வி கற்கும்போதே காதலிக்கின்றான். அவளோ கந்தனை அவனது விளையாட்டுத் திறமையில் ஈடுபாடுகொண்டு ஈர்ப்பும் கொண்டு காதலிக்கிறாள். கந்தனும், காவ்யாவும் உரையாடும்போது இப்பெண் கந்தனிடம் அந்தஸ்தை எதிர்பார்க்கின்றாள் என்பது புலனாகின்றது.

'பக்கத்து வீட்டு வாசலில் கார் ஒன்று நின்றது இதைக் கண்ட காவ்யா' நீங்களும் இப்படித் தானே படிச்சு முடிஞ்சா கொஞ்ச நாளில கார்ல வருவிங்க... என்றதும் கந்தனின் சிந்தனை திடுக்கிட்டது.' இவளது பதிலுக்கு மறுபதில் அளிக்கும் கந்தன் தான் ஒரு வறுமையான குடும்பத்தைச் சேர்ந்தவன் என்பதையும் தன்னுடைய குடும்ப வருமானம் தன்னுடைய குடும்பத்திற்கு போதாது என்பதையும் தெரிவித்து அவளை வசதியுடன் வைத்திருக்காவிட்டாலும் சந்தோஷமாக வைத்திருக்க முடியும் எனவும் கூறுகின்றான்.

காவ்யாவை உண்மையாக கந்தன் காதலித்தாலும் அவளோ காதல் என்பதை வேறொரு புரிதலுடன் விளங்கிக்கொண்டு, 'இவன் கஷ்டப்பட்ட பெடியன் சீ... சீ... இவன்ட விளையாட்டுத் திறமையைப் பார்த்து மயங்கிப் போனேனே. அப்பவே நான் நினைத்தனான் இரண்டு சேட்டை மாறி மாறி போடேக்கேயே. சரி என்ன செய்யிறது. படிச்சு முடியும் மட்டும் பொழுது போக்க கொஞ்ச நாளைக்கு காதலிப்பம். திடீரென்று அவனோட கதைக்காமவிட்டா பைத்தியம் பிடிச்சாலும் பிடிச்சிடும் அவனக்கு... படிக்கிற காலத்துக்கு இவனோட பழகிட்டு பிறகு கலியாணம் கட்டேக்க நல்ல வடிவான பணக்காரனாகப் பார்த்துக் கட்டுறதுதானே...' என கூறுகின்றாள்.

இங்கு காவ்யா என்னும் பெண் காதல் என்பதை வெறும் பொழுதுபோக்காகவும் ஆடம்பரமாக வாழ்வதற்கு ஒரு பணக்கார ஆண் வேண்டும் எனவும் எதிர்பார்க்கின்றாள். கந்தனுடன் பழகிக்கொண்டே இன்னுமொரு ஆடவனுடன் தொடர்புகொள்கிறாள், காவ்யா. இதனை அறிந்த கந்தன் அவளைவிட்டு விலகுகின்றான்ளூ இன்னுமொரு பெண்ணைத் திருமணம் செய்துகொள்கின்றான். காவ்யா பல ஆண்களை காதலித்து ஏமாற்றமடைந்து இறுதியில் தனிமையில் வாடுகின்றாள். இவளை அவர்கள் திருமணம் செய்துகொள்ள முன்வரவும் இல்லை. கந்தன் காதல் தோல்வியை பொருட்படுத்தாமல் நீளம் பாய்தல் போட்டியில் வெற்றியீட்டி ஒலிம்பிக் போட்டியிலும் விளையாடி

தங்கப்பதக்கத்தை பெற்றுக்கொள்கின்றான். தன்னிடம் 'ஆட்டோகிராப்' வாங்க வரும் காவ்யாவிடம் கந்தன் எழுதிகொடுக்கும் பதில் 'அன்பின் காவ்யா நீ என்றும் எனது காதலிதான் ஆனால் எனது மனைவியாக முடியாது. ஏனென்றால் நான் இன்னுமொரு பெண்ணுக்கு கணவனாகிவிட்டேன். நீ எனக்கு மனைவியாக வேண்டிய காலம் கடந்துவிட்டது.' (புயல்,2006, பக்.25)

காதலுக்கு அந்தஸ்தை மட்டும் பார்த்து பலரை ஏமாற்றிய காவ்யா என்னும் பாத்திரவார்ப்பும் காதல் தோல்வியை பொருட்படுத்தாமல் வாழ்வில் சாதனை படைத்து ஒரு பெண்ணைத் திருமணம் செய்துகொண்டு வாழும் கந்தன் என்னும் பாத்திரவார்ப்பும் இன்றையத் தலைமுறையினருக்கு ஒரு முன்மாதிரியாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. மேலும் இச்சிறுகதையில் காவ்யா என்னும் பெண் தன்னை ஏமாற்றினாள் என்பதற்காக அவளை கத்தியால் குத்துதல், கற்பழித்தல் அல்லது பழிவாங்குதல் முதலான வன்முறைகளை கையாளாமல் அவளைவிட்டு நாகரீகமான முறையில் விலகி வாழ்வில் இலட்சியப் புருஷனாக வலம் வருகின்றான், கந்தன்.

'செழிப்பைத் தேடும் பறவைகள்' என்னும் சிறுகதைத் தொகுதியில் படைக்கப்பட்டுள்ள 'காதல் விடுதலை' என்னும் சிறுகதை தொலைபேசி உரையாடல் ஒன்றினை மையமாகக் கொண்டு புனையப்பட்டுள்ளது. பெயர் சுட்டப்படாத இரண்டு காதலர்களின் உரையாடல் இறுதியில் காதல் தோல்வியில் முடிகின்றது. கதையின் நாயகன் தனது காதலியிடம் அவளது நண்பியின்பொருட்டே தன்னை காதலித்ததாக கூறுகின்றான். அவளும் தனது தவறை உணர்ந்து இறுதியில் அவனை உண்மையாகவே காதலிப்பதாக கூறியும் அதனை நிராகரித்துவிட்டு கல்வி, இலக்கியம் என தன்னுடைய பயணத்தை தொடர்கின்றான். இச்சிறுகதையில் வரும் சில உரையாடல்கள் கதாநாயகனின் உண்மையான காதலையும் அவனது நியாயங்களையும் வெளிப்படுத்துகின்றன.

'...ஏன் உமக்கு இரும்பு இதயமா? என்னை உயிருக்கு உயிரா காதலிக்கிறன் என்று சொல்லிபோட்டு ஏன் இப்படி என்னை வெறுத்து கதைக்கிறீர்.' (புயல், 2005, பக்.37)
'நீர் என்னை உண்மையாகக் காதலிக்கவில்லை. இல்லாட்டி ஏன் இப்படி வெறுத்து கதைக்கிறீர். உம்முடைய நண்பிக்காக வேண்டித்தான் நீர் என்னைக் காதலித்து இருக்கிறீர்... என்னை காதலித்து திருமணம் செய்யாவிடின் எனக்காக வேண்டி தனது உயிரை விட்டுவிடுவேன் என்று கூறிய காரணத்தினால் நீர் என்னை காதலித்தீர். உமது நண்பியின் வேண்டுகோளை பூர்த்தி செய்ய நானா பலிக்கடாவாக கிடைத்தன்.' (புயல், 2005, பக்.40)

'...மற்றைய ஆண்களைப் போல உள்ள ஒன்றும் வெளிய ஒன்றும் பேசியிருந்தால் இப்படி நீர் எடுத்து எறிந்து கதைக்கமாட்டீர். நான் எத்தனையோ பெண்களிடம் பழகியிருக்கிறன். ஆனாலும் எனது மனச்சாட்சியின்படி காதலிக்கச் சொல்லி கேட்ட பெண் நீதான். நான் உன்னை காதலித்து கைவிட கேட்கவில்லை...'
(புயல்,2005,பக்.40)

இச்சிறுகதையில் நண்பிக்காக ஒரு பெண் காதலித்தால் என்ற உண்மை கூறப்பட்டாலும் நண்பியின் நோக்கம் என்னவென்பது பற்றிய எந்தவொரு தெளிவும் இச்சிறுகதையில் முன்வைக்கப்படவில்லை. கதையின் நாயகன் மேலோட்டமாக நண்பிக்காகவே தன்னை இப்பெண் காதலித்தாள் என்று தொலைபேசி உரையாடலில் கூறுகின்றான். அவனது காதலியும் அதனை ஒப்புகொள்கின்றாள். அவ்வாறு காதலிக்கச் சொன்னமைக்கான தகுந்த காரணத்தை இச்சிறுகதை ஆசிரியர் கூறாமைக்கான காரணம் தெரியவில்லை பிரச்சினையை தெளிவாக விளங்கிகொள்ளவும் முடியவில்லை.

இருப்பினும் போலியாக ஒருவரை காதலித்து ஏமாற்றக்கூடாது என்பதை இச்சிறுகதை பதிவுசெய்யும் அதேவேளை காதலுக்கு அப்பால் வாழ்வில் இன்னும் பல விடயங்கள் உண்டு என்பதையும் உணர்த்துகின்றது. இதனை '...காதலிலிருந்து விடுதலை பெற்று மீண்டும் குடும்ப பந்தத்திலும் கல்வி, இலக்கியத்துறையிலும் இணைந்துக் கொண்டான்.' (புயல், 2005, பக்.43) என்னும் சிறுகதை பகுதி உணர்த்துகின்றது.

'நனவாகாத காதல்' என்னும் சிறுகதை பல்கலைக்கழகத்தில் உள்ள நூலகத்தில் கண்ணன் - மது ஆகிய இருவருக்கிடையில் பூத்த காதலையும் அதன் போலியான நாடகங்களையும் சித்திரித்துள்ளது. காதலுக்கு கண் இல்லை என்பது பொதுவாக பெரியோர் மத்தியில் கூறப்படும் ஒரு கூற்று. அதுபோலவே கண்ணனும் தன்னுடைய காதலிக்காக நோயுற்ற தனது தாய், விறகு வியாபாரம் செய்து படிக்கவைக்கும் தனது தந்தை, தங்கைகள் ஆகியோரை மறந்து மது என்னும் பெண்ணின் பின்னால் அழைகின்றான். இறுதியில் அப்பெண் வெளிநாட்டு மாப்பிள்ளையை திருமணம் செய்யும் நோக்கில் கண்ணனை ஏமாற்றிவிடுகின்றாள்.

இதனால் வாழ்க்கையில் கண்ணன் சிறந்தவொரு பாடத்தை பெற்றுக்கொள்கின்றான். ஊரில் இருக்கும் தனது தாயின் மரணச்செய்தியை அறிவித்து வந்த கடிதத்தைகூட படிக்காமல் தனது காதலி மது அனுப்பிய கடிதத்தையும் அதில் தான் திருமணம் செய்து கொள்ள போகும் நபரை பற்றி குறிப்பிட்டதை பற்றியும் அறிந்துகொண்டு குடிபோதையில் திரிகின்றான்.

இச்சிறுகதையில் காதலர் உணர்வு, அதன் ஏமாற்றங்கள் மட்டுமன்றி கண்ணனின் குடும்பநிலைமை, ஏழ்மை, தனது ஊரில் பல்கலைக்கழகம் தெரிவானதும் அவனுக்கு வழங்கப்பட்ட கௌரவம் என கதையை நகர்த்திச் செல்லும் ஆசிரியர் இன்றைய இளையோருக்கு சிந்திப்பதற்கான வழியையும் ஏற்படுத்தியுள்ளார். இதனை, '...கண்ணன் தாயின் புதைகுழியைத் தவிர வேறு எதையும் காணவில்லை. இப்போது இவன் சமுதாயத்தில் அந்நியப்பட்டவனாக மாறிவிட்டான். ஏன்தானோ தெரியவில்லை இவன் காதல் வாழ்க்கையின் ஒரு பகுதிதான். காதலே வாழ்க்கையில்லை இதைவிட எவ்வளவோ பகுதிகள் உண்டென்பதை இவ்வளவு படித்தும்கூட அறியாமல் இருக்கின்றான்.' (புயல், 2005, பக்.76) என கூறுகின்றார். உண்மையில் இச்சிறுகதையில் காதல் பற்றியும் அதன் தோல்வி பற்றியும் மாத்திரம் கூறி கதையை

நிறைவுசெய்யாமல் அந்த தோல்வியிலிருந்து விடுபட்டு ஆக்கபூர்வமாக சிந்தித்து இலட்சியப் பாதையில் இளையோர் செல்லவேண்டும் என்பதையும் இச்சிறுகதை ஆசிரியர் அவாவியுள்ளார்.

வறுமையில் கல்வி உரிமையை பெற்று அதனூடாக ஒரு தொழிலையும் பெற்று தமது குடும்பத்தை சுபீட்சமாக வாழ வைக்கலாம் என நினைத்தே பொதுவாக இளையோர் கற்கின்றனர்ளூ பல்கலைக்கழகத்திற்குள் பிரவேசிக்கின்றனர். ஆனால் காதல் வலையில் சிக்குண்டு வெளிவராமல் தமது குடும்பத்தை பற்றி எண்ணாது மோகம் கொண்டு திரிகின்றனர். இன்றும் பலர் பல்கலைக்கழக வளாகத்தில் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவதை கண்காணிக்கமுடிகின்றது. அதே அனுபவத்தையே 'நனவாகாத காதல்' என்னும் சிறுகதை தருகின்றது இளையோரை சிந்திக்கவும் தூண்டுகின்றது.

'அந்தஸ்து' என்னும் தலைப்பில் படைக்கப்பட்டுள்ள சிறுகதை ரவி தேவி ஆகிய இருபாத்திரங்களை முன்னிறுத்தி காதலருக்கு அன்பைவிட அந்தஸ்து எவ்வளவு முக்கியமானதாக இருக்கின்றது என்பதையும் அதனால் ஏற்பட்ட விளைவுகளையும் விபரித்துள்ளது. வறிய குடும்பத்தைச் சேர்ந்த ரவி உயர்தரம் படிக்கும் காலத்தில் தேவி என்னும் பெண்ணை காதலிக்கின்றான். அவளோ அந்தஸ்தை மட்டும் கருத்தில் கொண்டு ரவியை நோக்கி, 'ரவுடீ ராஸ்கோல் நா யார் தெரியுமா? மெடிசின் ஸ்டுடன்ட் உனக்கு என்ன லவ் பண்ண என்ன தகுதி இருக்குதடா? ஐம்பது சதத்திற்கு வழியில்லாத கூலிகள் குடும்பத்தைச் சேர்ந்தவனே எனக்கிட்ட இருக்கிற பணமும் படிப்பும் உனக்கிட்ட இருக்காடா...' (புயல், 2005, பக்.21) என திமிராக வினவுகின்றாள். இதனால் குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி மனம் உடைந்து திரியும் ரவி தன்னுடைய நண்பன் ரஜீசின் வழிகாட்டலில் சிறந்த தொழிலதிபராக மிளிர்கின்றான். ஆனால் தேவி அந்தஸ்தை எதிர்பார்த்து வெளிநாட்டில் மருத்துவம் படித்த ஒருவனைத் திருமணம் செய்துகொள்கின்றாள். பின்னர் அவன் ஏற்கனவே திருமணமாகி இரண்டு பிள்ளைகளுக்குத் தகப்பானாகியுள்ளமையை அறிந்தும் தனது கற்பு பறிபோனதை எண்ணியும் செய்வதறியாது தவிக்கின்றாள். பின்னர் ரவியின் வளர்ச்சியைக் கண்டு தனது தவறையும் உணர்ந்துகொள்கிறாள்.

பணம், பதவி, சுகவாழ்வு என்பனவே காதலை தீர்மானிக்கின்றது என்பதை தேவி என்னும் பெண்ணின் பேச்சுக்கள் வெளிப்படுத்துகின்றது. அதனாலேயே திருமணத்தின்போது அவளது கணவனின் இறந்த காலம் பற்றிய தேடல்களும் தெளிவும் இல்லாமல் வாழ்வை இழந்துவிடுகின்றாள். பொதுவாக இன்றைய காலச் சூழலில் பெண்கள் மட்டுமல்ல, பெண் - ஆண் இருபாலாரின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்கூட திருமணம் என்னும்போது பணம், தொழில், சாதி, வயது என அனைத்தையும் சிந்தித்தே திருமணத்தை நடத்த முயற்சிக்கின்றனர். மேலும் காதல் ஒரு உணர்வு, ஈர்ப்பு, விருப்பம் என்பவற்றின் அடியாக தோன்றி இளையோர் மத்தியில் இருப்பதுடன் அதன்பின்னால் நடைபெறும் திருமணத்திற்கு பணம் அவசியம்தான்.

ஆனால் தேவைக்கதிகமான பணம் வாழ்வில் இன்பத்தைத் தருவதில்லை. தேவைக்காவது பணம் இல்லையென்றால் காதலின் பின் காதலன் - காதலியுடன் அமையும் இல்வாழ்க்கை கசந்துவிடும். இது வாழ்வின் யதார்த்தம். இருப்பினும் பணம், பதவியை மாத்திரம் காதலின் ஆதாரங்களாக எதிர்பார்ப்பது தவறானவொன்றாகும்.

இச்சிறுகதையில் வரும் தேவி என்னும் பெண் தன்னை உண்மையாக நேசித்த ரவியின் காதலை உணர்ந்து அவனை இலட்சிய நாயகனாக மாற்றி நல்வழிக்காட்டி தனது வாழ்வை ஒளிமயமாக்கியிருக்கலாம். இருப்பினும் பலர் அதனை உணர்வதில்லை. சிலவேளைகளில் தேவியின் பெற்றோர் அவளை ஒரு சாதாரண வறிய குடும்பத்தைச் சேர்ந்த, உயர்தரம் படித்த ரவிக்கு திருமணம் செய்துவைக்கத்தத் தவறியிருக்கலாம். இன்றும் எமது சமூகத்தில் காதல், திருமணங்கள் யாவும் பணம், பதவி என்பவற்றிட்கு அப்பாற்பட்டதாகவே இருக்கின்றது.

தொலைநோக்கு சிந்தனையுடன் காதலர் சிந்தித்து அதன் பின்னர் காதல், மணவாழ்வை வெற்றிநடைபோட முயற்சிசெய்யலாம். அவ்வாறான தொலைநோக்கு சிந்தனையுடன் தேவி என்னும் பெண் சிந்தித்திருக்கலாம். அவளுடைய திருமணவாழ்வு பொய்த்ததாலேயே தன்னை காதலித்த ரவி பற்றிய சிந்தனை அவளுக்கு வருகின்றது. இல்லையெனில் ரவியின் உண்மையான காதலை புறக்கணித்துவிட்டோம் என அவள் எண்ணி வருந்தமாட்டாள். காதல் தோல்விகளுக்கு மத்தியில் தன்னுடைய வாழ்வை ஒரு ஆணும் பெண்ணும் மாற்றியமைத்துக்கொண்டு மகிழ்ச்சியாக வாழ்வதையும் நடைமுறையில் காண்கிறோம்.

முடிவுரை

புயல், பெ.ஸ்ரீகந்தநேசனின் சிறுகதைகளில் வடிவம் பெற்றுள்ள பாத்திரங்கள் காதலித்து, பின் ஏமாற்றமடைந்து, இலட்சிய பாதையில் செல்லும் கதாப்பாத்திரங்களாகவே நம்முன் வலம் வருகின்றன. மாறாக காதல் பலிவாங்கள்களில் ஈடுபடும் பாத்திரங்களையோ, தற்கொலையை நோக்கிச் செல்லும் பாத்திரங்களாகவோ அவை படைக்கப்படவில்லை. இச்சிறுகதைளில் முக்கியமான ஒரு விடயம் அவதானிக்கப்பட வேண்டியுள்ளது. இங்கு ஆய்விற்குட்படுத்தப்பட்ட பெரும்பாலான சிறுகதைகளிலும் பெண்களே ஆண்களை ஏமாற்றினர் என்றும் அந்தஸ்தை எதிர்பார்க்கின்றனர் என்றும் இச்சிறுகதையாசிரியர் கூறியுள்ளார்.

ஏன் ஆண்கள் பெண்களை ஏமாற்றவில்லையா? அவர்கள் அந்தஸ்தை பெரிதாக எண்ணவில்லையா? அல்லது பிறரை ஏமாற்றத் தெரியாதா? என்பது சிந்திக்கவேண்டியதாக உள்ளது. எது எவ்வாறு இருப்பினும் இவரது சிறுகதைகளில் வரும் பாத்திரங்கள் சவால்களையும் தோல்விகளையும் கண்டு அஞ்சி முடங்கிவிடாது பிறரை பழிவாங்காது வாழ்வின் யதார்த்தங்களை உணர்ந்து செயலாற்றும் இலட்சிய பாத்திரங்களாகவுமே சிருஷ்டிக்கப்பட்டுள்ளன. மேலும் இவரது சிறுகதைகள் இன்றைய இளைஞர்களின் காதல் என்ற உணர்வையும் அதன் பின்னால் இருக்கின்ற பொய்மை

மெய்மைகளை சிந்தித்து செயலாற்றுவதற்கு ஒரு கருவியாக இருக்கின்றமை உண்மையாகும்.

துணை நூல்கள்

1. புயல், செழிப்பைத் தேடும் பறவைகள், லலிதா கிராபிக்ஸ் வெளியீடு, இணுவில், 2005.

2. மேலது, காகங்களும் மைனாக்களும், தமிழ்ச் செய்தித் தகவல் மையத்தின் வெளியீடு, யாழ்ப்பாணம், 2006.

--

சி.ரஞ்சிதா

---

# ஏக்கத்தின் சிறு வரிகள்



சின்ன சின்ன மனசு
சில்லு சில்லாய் சிதறிவிட்டது
சிறகுகள் நீ தான் கொடுத்தாய்
பறப்பது குற்றம் என்றாய்!

வாதாடினேன் என் மனதோடு
வென்றது இதயம்
தோன்றது நான்!

உன்னை நினைத்துக் கொண்டே தொடர்கிறது எந்தன் காதல் பாதை
ஒரு நாள் முடிவில் நீ வருவாய் என்று!

பா.எழிலரசி பாலசுப்பிரமணியம் சாந்தி
புவியியல் துறை
மூன்றாம் ஆண்டு
அ.வீரைய வாண்டையார் நினைவு திரு புட்பம் கல்லூரி பூண்டி
மன்னார்குடி

# என்னுள் கலந்த தமிழ் பற்று!!!

இம்மண்ணில் பிறந்த என்னை வாய்திறந்து பேச வைத்த எம் முதல்மொழி!!
பிறந்த உடனே அம்மா என்று என்னை அழைக்க வைத்த எம் தாய்மொழி!!
என் உடல், உயிர் கொண்ட எம் உன்னதமொழி!!
தாலாட்டி மகிழ்வில் தினம் என்னை சீராட்டிய எம் தமிழ்மொழி!!
எனக்கு பண்பை வளர்த்த எம் பண்பாட்டுமொழி!!
இதயம் கனிந்த உறவுகளை இணைத்திட்ட எம் இனியமொழி!!
என் வாழ்வில் அன்றும் இன்றும் நன்மை கூட்டிய எம் நற்செம்மொழி!!
என்னுள் தோன்றும் துன்பத்தை போக்கிய எம் துடிப்புமொழி!!
எப்போதும் என்னை அனைத்துக் கொண்ட எம் அன்புமொழி!!
என்னுள் பக்தியையும் புரட்சியையும் ஒரு சேர ஊட்டியமொழி!!
அநேக மொழிகள் பல இருந்தாலும் என்னுடைய உறவுகளை அன்புடன் வாழ்த்த எம் அடிப்படையான மொழி!!
உலக மொழிக்கெல்லாம் மூத்த எம் முதல்மொழி!!
வேற்று மொழிகள் நூறு கற்றாலும் நீயே எம் உயிர்மொழி!!
நீ இவ்வுலகை ஆள பிறந்தமொழி!!
மன்னாதி மன்னர்களும் மதித்துக் காத்த எம் செம்மொழி!!
தொன்றுதொட்டு அன்று முதல் இன்று வரை தொடரும் எம் தொடர்மொழி!!
உலகமே போற்றும் தனிப்பெருமை கொண்ட எம் தனித்துவமொழி!!
அழகு பொங்கும் உன்னை பற்றி கவிதை எழுதும்போது ஏதோ ஒருவிதமான பரவசம் என்னுள்ளே!!
இப்பிறவியில் மட்டுமல்ல இனி எடுக்கின்ற எப்பிறவியிலும் தமிழச்சியாய் பிறந்து!!
தேனினில் இனிமையாய் இனித்திடும் உம்மை!!
நாவினில் நயமுடன் இன்புற பேசிட!!
சிந்தனை சிறந்திட அறத்தினை பற்றிட!!
பிறந்திடும் பிள்ளைக்கு தமிழையே ஊட்டி!!
நம் மொழி தமிழோடு வாழ ஆசை!!!!!



--
**கார்த்திகா ராமதாஸ்,**
கணிப்பொறியாளர்,
வடுவூர் புதுகை.

# முதல்நிலை மாற்றங்கள்

தேசியவிருதை பெறுபவனாய்
தேகம் சிலிர்த்து,

பூஜையில் பங்கெடுத்த
பூமாலையாய்
பணிந்துபெற்று,

நிரம்பி வழியும்
எண்ணெய்க்
கிண்ணத்தையேந்தி
நடப்பவனாய் நடந்து,

புரையேறிய குழந்தையின்
தலையில் தட்டுவதாய் தட்டி,

சொர்க்கவாசல் திறப்பவனாய்
சிந்தனையில்  சிலிர்த்து,

முதல் காதலிக்கிடும்
முதல் முத்தமாய்
உதடு பொருத்தி,

திணிக்கப்பட்ட தியானம்
செய்பவனாய்
கண்கள் இறுக்கி,
முகம்  முறுக்கி,

தேவாமிர்தம் பருவதாக
தொண்டைக்குள்  இறக்கி,

வெட்டப்படும் முன்
குறிகேட்ட பின்
சிலிர்க்கும்  கிடாயாக
உச்சி முதல் பாதம் வரை

உடல் சிலுப்பி,

எனைப்பருகியதாலே
உனதுள்ளுக்குள்
உற்சாகப்பயிர்
வளர்வதாயெண்ணும்
நீ
உன்னுடல்  உருகி
உறவுகள் விலகி
உயிர் கருகுவதை
உணர்வதெப்போதென

ஊமைமொழி பேசியது
மதுபாட்டில்...

--
நேசமுடன் ஈசு



# பிரஞ்சு தந்தையின் சீனத்து மகள்



இளவரசி இளங்கோவன்

அன்று வழக்கத்துக்கு மாறாக ஏழாவது தளத்திலேயே உணவருந்த முடிவு செய்து உணவருந்தும் இடத்திற்கு சென்றேன். எப்போதும் நூறுக்கும் மேற்பட்டோர் அமர்ந்து உண்ணும் வசதியுடன் கூடிய ஆறாவது தளத்தில் தான் எனது மதிய உணவு தொலைபேசியுடனோ, தொலைபேசியில் உள்ள புத்தகத்தோடு அல்லது வரவு செலவு கணக்கோடு நடக்கும். ஆனால் இது ஆறு மேசைகளும், இருபது நாற்காலிகளும் கொண்ட சிறிய உணவருந்தும் இடம் தான். மேசை ஏதும் கிடைக்குமா என ஓரிடத்தில் நின்று கண்களால் துழாவினேன்.

எல்லா மேசைகளிலும் ஆட்கள் சாப்பிட்டு கொண்டிருந்தார்கள். ஆனால் எல்லா மேசையிலும் நாற்காலிகள் சில காலியாக இருந்தன. மேசையை விடுத்து நாற்காலி தேர்வு தொடங்கியது என்னுள். பல நாட்டினர் வேலை செய்யும் பிரெஞ்சு மொழியை அடிப்படையாக கொண்ட வாங்கி அது. தொன்னூறு சதவீதம் பிரெஞ்சு மொழி பேசுபவர்கள் தான் அங்கு அதிகம். எனது தேடல் அந்த பிரான்ஸ் தேசத்தை சேர்ந்த என் பக்கத்துக்கு அணியில் பணிபுரியும் அந்த நண்பரை பார்த்தவுடன் முடிவுக்கு வந்தது. புன்முறுவலோடு அந்த மேசையை நோக்கி நகர்ந்தேன். உணவை முடிக்கும் தருவாயில் இருந்த அந்த நண்பர் என்னை பார்த்தவுடன் புன்முறுவலோடு வரவேற்று அவரது உணவு நேரத்தை என்னக்காக நீட்டிப்பு செய்தார்.

எனது அணியிலேயே ஒவ்வொருவரும் ஒரு தேசத்தை சேர்ந்தவர்கள். நாங்கள் ஒன்றாக அமர்ந்து உண்ணும் போது அவர் அவர் தேசத்து உணவு, உடை, கலாச்சாரம் பழக்க வழக்கங்கள் பண்டிகைகள் பற்றி விவாதிப்போம். ஒரு முறை விசித்திரமான விவாதம் ஒன்று கூட நடந்தது. ஒவ்வொரு நாட்டிலும் ஒரு நபரை சாடும் போது என்ன விதமான வார்த்தைகள் பயன்படுத்துகிறார்கள் என்று. நான் இதுவரை சிந்திக்காத கோணம் இது. விலங்குகள் பெயர்களை சொல்லி சாடும் பழக்கம். மரம் போன்ற அஃறிணை பொருள்களை சொல்லி சாடுவது, உடல் பருமனை கேலி செய்து சாடுவது, சாப்பிடும் பழக்கத்தை சொல்லி சாடுவது, தாய் தந்தையை சொல்லி சாடுவது என ஒவ்வொருவரும் அவரவர் தேசத்து முறையை சொல்ல பெரும்பாலும் உலகம் சாடுவதில் ஒற்றுமையை பின்பற்றுவதை எண்ணி என்னுள் வியந்து போனேன்.

அன்றும் எங்களது விவாதம் தொடங்கியது. எனது வேலை பளுவை பற்றி கேட்டறிந்த அவர் எனது வசிப்பிடம் பற்றி வினவினார். எனது வசிப்பிடம் விரைவு ரயில் அருகில்

உள்ளதா என கேள்வி தொடுத்த அவர் எனது பதிலால் முகம் மலந்து உற்சாகமானார்.

எனது வசிப்பிடத்து எதிரே அமைந்துள்ள ஒரு பிரசித்தி பெற்ற கல்லூரியின் பெயர் தான் அவரது முகமலர்ச்சிக்கு காரணம். ஒவ்வொரு ஞாயிறும் காலை தான் அங்கு சீன மொழி பயிற்சி வகுப்புக்கு வருவதை தெரிவித்தார். எனக்கு வியப்பு ஏதும் ஏற்படவில்லை. இங்கு உள்ளவர்கள் பல மொழிகள் கற்பதில் வயது வரம்பு இல்லாமல் விருப்பம் கொண்டவர்கள். விரும்பி தான் கற்பார்கள். இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்ட மும்மொழி கொள்கை, அதன் எதிர்ப்புகள் நினைவில் வந்தது. கட்டாயப்படுத்துதல் உரிமையை மீறுதல் போன்றது. ஒரு மொழியின் மேல் அக்கறை ஏற்பட்டு, தேவைக்குத் தகுந்தாற்போல் கற்றுக்கொள்வது தான் சரியானது. மும்மொழிக் கொள்கை என்ற பெயரில் கட்டாயப்படுத்தி, ஒரு மொழியைத் திணிக்கக் கூடாது. தமிழ் நாட்டுக்கு சென்ற எனது சிந்தனையை மீட்டு அந்த நண்பரிடம் எனது சந்தேகத்தை கேட்டேன்.

தான் தன் எட்டு வயது மகளை சீன மொழி கற்றலுக்கு விடுவதை தெரிவித்தார். நான் பணியில் அமர்ந்து ஆறு மாதங்களுக்கு பின் பணியில் அமர்ந்த அவர் சென்ற விடுமுறையில் கூட சீன தேசம் சுற்றுலா சென்றது நினைவில் வந்தது. பல ஆண்டுகளாக திட்டமிட்டு இந்தவருடம் தன் செல்ல வாய்ப்பு கிடைத்தது என பயணத்திற்கு முன்பு அவர் சொல்லி சென்றதும் நினைவில் வந்தது. கியூபெக் மாநிலத்தை சேர்ந்த அவரது மனைவி சீனத்து பெண்ணாக இருக்கலாம் என இயல்பாக எனக்குள் தோன்றியது. எனது தர்க்க குணம் சீனாவை சேர்ந்தவர்கள் தான் சீனாவிற்கு செல்ல வேண்டுமா. எந்த நாட்டவர்களாக இருந்தாலும் அவர்கள் இந்த முறை விடுமுறையை சீனாவில் கழிக்க செல்கிறார்கள் என கேள்வியும் கேட்டு பதிலும் நானே சொல்லிக்கொண்டு அமைதியானதும் நினைவில் வந்து சென்றது.

அன்று அமைதியான எனது மனம் இன்று உறுதி செய்ய விழைந்தது. நீங்கள் பிரான்ஸ் தேசத்தை சேர்ந்தவர் தானே என நான் எனது சந்தேகத்தை நாகரிகமாக வெளிப்படுத்தினேன். அதற்க்கு அவர் அளித்த பதில் எனக்குள் மின்னலை பாய்ச்சி பெரிய வெளிச்சத்தை உண்டு பண்ணியது மட்டுமில்லாமல் எனது சிந்தனையை வேறு தளத்திற்கு கொண்டு சென்று விட்டது.

ஆம் புன்முறுவலோடு அவர் உரைத்த பதில் ‘‘எனது மகள் சீன தேசத்தை சேர்ந்தவள் . நாங்கள் அவளை சீன தேசத்தில் ஒரு அனாதை விடுதியில் இருந்து தத்து எடுத்து வளர்க்கிறோம். அவள் ஏழு மாத குழந்தையாக இருந்தபோது நாங்கள் சீன தேசம் சென்று அவளை தத்து பெற்று இங்கு கொண்டு வந்தோம்.’’ அவரது இந்த பதிலை கேட்டவுடன் வாயடைத்து போனேன். ஏழு மாத குழந்தையாக வந்து பிரான்ஸ் நாட்டினரை தாய் தந்தையாகவும், கனடா நாட்டினை தாய் நாடகவும் கொண்டு பிரெஞ்சு ஆட்சி மொழியாகவும் தாய் மொழியாகவும் உள்ள கியூபெக் மாகாணத்தில் வளரும் அந்த சிறுமி ஏன் சீன மொழி கற்க வேண்டும், என்ன அவசியம் என்ற எனது சிந்தனை என்னை வியப்புக்குள்ளாக்கியது மட்டுமில்லை எனது கண்களில் கண்ணீரை வரவழைத்தது.

அதற்கு அந்த தந்தை சொன்ன பதில் ‘‘அவளது நாட்டிற்கு ,அவளது உணர்விற்கு அவளுக்கு நாங்கள் மதிப்பளிக்கிறோம். நாங்கள் தத்து பெற்றதாலேயே எங்களது கலாச்சாரத்தை பண்பாட்டை மட்டுமே அவளுக்கு புகட்டுவது முறையாகாது என்றார். தான் பெற்ற பிள்ளைகளையே அடிமை போல தான் சொன்னதைதான் கேட்க வேண்டும் என சிறகை முறிக்கும் பெற்றோர்களாக எத்தனைப்பேர் நம்மில் இருக்கிறோம். ஆடைகள் தேர்ந்தெடுப்பதில் தொடங்கி படிப்பை தேர்வு செய்வதில் தொடர்ந்து திருமண உறவு தேர்வில் கூட பெற்றோரகளின் தலையீடு இருக்கிறது.

அவர்களுக்கு சரியாக தேர்வு செய்ய கற்றுக்கொடுக்க வேண்டியது மட்டுமே பெற்றோர்களின் கடமையாக இருக்க வேண்டும். அப்படி செய்தால் மட்டுமே சுயசிந்தனையோடு சரியான முடிவுகளை எடுக்கும் வலுவான தலைமுறையை உருவாக்க முடியும் என்பது எனது நம்பிக்கை. சிந்தனை அறுபட அவரது பேச்சை கவனித்தேன்.

மேலும் தொடர்ந்த அவர் அவளது தாய் மொழியை அவளுக்கு கற்று கொடுப்பது அவளுக்கு தாய்ப்பாலை கொடுப்பதற்கு சமம். தாய் மொழியை தெரிந்தவர்களால் தான் நன்றாக சிந்திக்க முடியும். பிற மொழிகளையும் எளிதாக கற்க முடியும். திறமையானவர்களாக உருவெடுக்க முடியும். அதனால் தான் அவளை அவளாக வளர நாங்கள் துணை நிற்கிறோம். அவளுக்காக சீன உணவு தயாரிக்க பழகி கொண்டோம். சீனாவில் வாகனம் ஓட்ட கூட தன்னிடம் அனுமதி உள்ளது. அவளுக்காக தான் பெற்றோம். இன்னும் சற்று அவள் வளர்ந்தவுடன் மறுபடியும் சீனா சென்று அவள் பிறந்த இடத்தை, சுற்றத்தை அவளுக்கு கட்டவேண்டும்’’ என முடித்தார்.

ஒரு தனி மனிதனுக்கு, ஒரு சிறு குழந்தையின் உணர்வுக்கு அவர்கள் கொடுக்கும் இந்த மதிப்பு மரியாதை எண்ணி பேச்சற்று கண்களில் கண்ணீரோடு சிந்தையில் சிந்தனை சுழலில் சிக்கி கொண்டேன் நான். எனக்குள் அவரது செயல் பாய்ச்சிய சிந்தனை வெளிச்சம் தாய்மொழி கற்றலின் அவசியம். நம்மில் எத்தனை பேர் நம் குழந்தைகளுக்கு தாய்மொழி கற்றுக்கொடுக்க முன்வருகிறோம். எல்லா பெற்றோர்களும் குழந்தையை நன்றே பேணி வளர்க்கவே விரும்புகிறோம். அவர்களுக்கு தேவையானவற்றை வாங்கி கொடுக்க எவ்வோளவோ சிரமப்பட்டு உழைக்கிறோம்.

அவர்களுக்கு சொத்து சேர்ப்பதையும் ஆடை அணிகலன்கள் நூதன கருவிகள் வாங்கி தருவதில் நாம் காட்டும் அக்கறை அவரகளது வாழ்க்கையின் அடித்தளமான அவர்களது குண நலன்களை நிர்ணயிக்கும் தாய் மொழி கற்றலில் இருக்கிறதா என சோதித்து பார்த்துக்கொள்வோம். காலம் கடந்து விடவில்லை. கற்றலுக்கு வயதில்லை. எண்பது வயதில் பிரெஞ்சு மொழி கற்கும் புலம் பெயர்ந்த உருது தாத்தாவை பார்த்திருக்கிறேன். புலம் பெயர்ந்த நாம் அனைவரும் நமது பிள்ளைகளுக்கு தாய் பாலை தாய் மொழியின் வழியே மீண்டும் ஊட்டுவோம்.

நாம் பிள்ளைகள் சிறந்த வலுவான மனிதர்களாக, மாமேதைகளாக வளர நாம் செய்யும் முதல் மற்றும் சரியான முயற்சி தாய் மொழியை கற்பித்தல். எந்த நாட்டை சேர்ந்தவராக இருந்தாலும், தாய் மொழி எதுவாக இருந்தாலும் கட்டாயம் பிள்ளைகளுக்கு பிற மொழிகளோடு தாய் மொழியையும் கற்பிக்க முயலவேண்டும் என்ற உறுதி வைராக்கியத்தோடு உங்களை எண்ணி பெருமிதம் கொள்கிறேன் எனக்கூறி கண்ணில் வழிந்த கண்ணீரை துடைத்து கொண்டேன்.

மதம், இனம், நிறம், மொழி, நாடு கடந்து அங்கு வென்றது மனித நேயமிக்க அன்பு மட்டுமே. ஒரு செடியை தண்ணீர் ஊற்றி பாதுகாப்பது மட்டும் தான் எனது வேலை அந்த செடி எந்த பக்கம் என்னவாக வளர வேண்டும் என்ன மலரை, காயை, கனியை கொடுக்க வேண்டும் என்பதெல்லாம் அந்த செடியின் விருப்பம் என எண்ணும் அன்பை மட்டுமே செலுத்தும் அதிகாரமற்ற எதிர்பார்ப்பு அற்ற ஒரு ஞானியின் தோற்றம் தான் அவரில் எனக்கு புலப்பட்டது.

மதிய உணவை முடித்து மனநிறைவோடு இருக்கைக்கு திருப்பினேன். வயிற்றுக்கும் மட்டும் இல்லாமல் செவிக்கும் சிந்தனைக்கும் விருந்தாக அமைந்த இந்நாள் ஒரு பொன்னான நாள். எல்லாவற்றையும் திணிக்கும், வன்முறை வளர்ந்த, மென்மை மறந்துபோன பிறரது வலியை துன்பத்தை உணர முடியாத, உணர முயற்சிக்காத சுயநலம் நிறைந்த, செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் பலனை கணக்கு போடும் இந்த கால கட்டத்தில் அவரது இந்த செயல் இதனை வாசிக்கும் ஒவ்வொருவருக்குள்ளும் மிகப்பெரிய சிந்தனை வெளிச்சத்தை பாய்ச்சும் என நம்புகிறேன்.

வாழ்க்கையில் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரும் நிகழ்வும் ஒவ்வொரு மனிதரும் ஒரு அனுபவ பாடத்தை கற்று கொடுத்து கொண்டே செல்கின்றனர். அன்பு இதயமும் அறிவு பசியும் அனுபவ தேடலும் உள்ளவர்க்கு கற்றல் ஒரு நாளும் முடிவதில்லை.

--

## இளவரசி இளங்கோவன்

# வெட்கம்

தமிழ்
எழுத்துக்களே
சற்று நாணி
வெட்கப்படுகிறது...
அவள் பெயரை
எழுதும்போது
மட்டும்...!

ஆணவம்
அவன் சாதி
ஆணவத்தில்
ஒரு ஆணவக்கொலை!
மகளின்
ஒன்(றி)று விட்ட
மாற்று
சாதிக்காதலால்...!

தாழ்வு மனப்பான்மை
கருப்பென்ற
தாழ்வு
மனப்பான்மையோ
முகம் மறைக்கும்
குயில்!

அனுபவம்
எல்லா
பயங்களையும்
அனுபவித்து கடந்தே
பாட்டியாகிறார்கள்
பெண்கள்!

சர்ச்சை
அணில் பிள்ளையின்
முதுகில்
மூன்று கோடுகளிட்டது
யார் என்ற சர்ச்சையில்
பட்டையும் நாமமும்!

அநீதி
எந்தப்
பாலுட்டிகளுக்கும்
இழைக்கப்படாத அநீதி
பசுக்களுக்கு மட்டும்!
கன்றைக்காட்டி
மனிதர்களுக்கு பால்!

வலி
முட்டிமுட்டி
பால் குடிக்கும்
ஆட்டுக்குட்டி
அறியுமா
தாயின் வலி!

கனவு
சொன்னால் பலிக்காது
என்பதால்
சொல்லாமலே
விட்டுவிட்டேன்
உன்னிடம்
நீ என்னைக்காதலித்து
கைப்பிடித்த கனவை!
ஒரு நாள்
நிஜமாகலாம் என்று!

நடுநிலை
வயதானவள் என்பதால்
பாட்டிக்காகவா
வாழவேண்டியவள்
என்பதால்
அம்மாவிற்காகவா
யாருக்கு ஆதரவு என்ற
கவலையில் அப்பா...
நடுவராய் நான்!

கவியாக்கல்
பார்த்ததை
கேட்டதை
சுவாசித்ததை என
எல்லாவற்றையும்
கவிதையாக்கினேன்
என்னைத்தவிர!

மகிழை. சிவகார்த்தி,
புறத்தாக்குடி.



# இயற்கையை விரும்பும் மனம்

பொழியும் பனியையும்...
பெய்யும் மலையையும்...

மனம் குளிர்ந்து ரசிக்கும் மனிதர்கள்,

வேர்வை சொட்ட வெக்கையை உமிழும்
வெயிலை மட்டும் திட்டி தீர்ப்பதைப்
பார்த்திருக்கிறேன்.

இயற்கையை விரும்புவதில் கூட
முரண்பாடுகள் இருக்கதான் செய்கிறது.

பனி, மழை, வெயில் இவை மூன்றையும்
சில அழகான நினைவுகளுடன்
தொடர்புபடுத்துததல் மூலம் இவற்றை
சம அளவில் ஏற்றுக்கொள்ள முடியும்.

அதாவது முழுமையாக இயற்கையின்
அழகை யூகிக்க முடியும்.

மழைக்காலங்களில் பள்ளி
விடுமுறையை எதிர்பார்த்து டிவி
பொட்டியை பார்த்தபடியே ஏங்கி
நின்றது...

கூரையின் வாரித் தண்ணீர்
விழுந்தோடிய

மணல் திட்டில் நெழியும் மண்புழுவை
பார்த்தப்படியே விரல்களால் பெயர்
எழுதியது...

மின்னலுக்கு பின் வரபோகும் இடிக்கு
பயந்து அர்ச்சுனா அர்ச்சுனா என்று கத்திய
குழந்தைத் தனம்...

பள்ளியில் பாடத்தை கவனிக்காமல்
ஜன்னல் வழியே பெய்யும் மழையை
பார்த்து குதூகலித்த தருணங்கள்...

இடைவேளைகளில் மரக்கிளைகளை
இழுத்து மழைத்துளிகளில் விளையாடும்
தோழிகளின் கூட்டம்...

சுவர்களில் அங்கும் இங்குமாய் அலைந்து
திரியும் சிவப்பு, கறுப்பு அட்டை
பூச்சிகள்...

மாலையில் தெருவிளக்கின் மங்கிய
வெளிச்சத்தில் பறக்கும் ஈசல் கூட்டம்...

அமைதியான இருளில் வயக்காட்டில்
கேட்கும் தவளைகளின் சப்தம்...

இவையெல்லாம் மழைக்காலத்தில் நம்
இதயத்தோடு வந்து செல்லும்
நினைவோசைகள்...

பனிக்காலம் குளிர்வாடை தாங்காமல்
வாயில் வரும் புகையை அடிக்கடி ஊதிப்
பார்க்கும் குறும்புத்தனம்...

கார்த்திகை மார்கழியில் தினமும்
காலையில் எழுப்பும் ஐயப்ப பாடல்கள்...

வாசலில் சின்ன சிம்னி விளக்கின்
வெளிச்சத்தில் அம்மா போட்ட பெரிய
கோலம்.

நடுவில் நான் கொண்டு வந்து வைக்கும்
அருகம்புல்லும் பூசணிபூவும் தனி
அழகு.

அந்த நாட்களில் அம்மாவின் கையில்
இருக்கும் மீனாவின் படம் போட்ட கோல
புத்தகம்.

குளிருக்கு இதமாய் போட்டுக்கொண்ட அப்பாவின் முழுக்கை சட்டையும் போத்திக் கொண்ட அம்மாவின் சேலையும் இன்னும் நினைவின் ஆழத்தில்.

இவைதான் இன்னும் இந்த குளிர்காலத்தை அழகுற வைக்கிறது.

வேனிர்காலம் எங்கும் இலையுதிர்ந்த மொட்டை மரங்கள் அல்லது பழுப்பு நிற இலைகள்.

குளத்துக் கடையில் மணலில் வைத்த மண்பானை தண்ணீர்.

வேகாத வெயிலில் மிதிவண்டியில் ஊர் ஊராய் சுற்றி கிரிக்கெட் விளையாடியது...

உச்சி வெயிலில் ஈச்ச மரத்தையும் எலந்த மரத்தையும் தேடித் திரிந்தது.

ஊரின் சித்திரை திருவிழாக்கள்

வெயிலிலும் வண்ணமயமானவை.

அம்மாவின் ஊரில் தாத்தா பாட்டியின் அன்பு இந்த அன்பு உண்மையில் கோடையின் கொடைதான் .

இவைதான் இந்த சுடும் வெயிலை இன்றும் ரசிக்க வைக்கிறது.

இப்படி இயற்கையுடன் நம்முடைய எல்லாத் தருணங்களையும் இணைக்கும் போது விவரிக்க முடியாத உணர்வுகளையும் பழைய நினைவுகளையும் மீட்டெடுக்க முடியும் அனுபவித்ததால் கூறுகிறேன்.

நினைவுகள் எப்போதும் அழகானது.



- நா.பாலாஜி
ராஜ மன்னார்குடி

# ஹைக்கூ கவிதைகள்...

...மறதி....

பிரம்மனுக்கும்
ஞாபக மறதி
உண்டு போல்...
அவன் படைப்பில்
ஒரு திருநங்கை...

....மாற்றுத்திறனாளி...

கை இல்லாதவன்
கூட கடவுளை
சரியாக படைத்து
விடுகின்றான்....
ஏனோ கடவுளால்
முடிவதில்லை....

...விடியல்...

கைபேசி சினுங்கி
எழுப்பிய காலத்தில்
புரிகின்றது
சிட்டு குருவியின்
சத்தம் எழுப்பிய
விடியல்
சுகமானதென்று....

...நகை...

பொன் நகைகள்
ஏனோ விலை
ஏறலாம் இறங்கலாம்...
பெண்ணே
புன்னகை கொள்...
உன் மதிப்பு
உயரும்...

...வளர்ச்சி...

மெட்ரோ ரயிலின்
சொகுசு பயணம்
உணர்த்தாது....
கட கட வென ஓடும்
அந்த கால
இரயிலின்
தாலாட்டை...

...விவாகரத்து...

நாம் ஒதுக்கி
விடும் சட்டை
கூட யாருக்கோ
பொருந்தி
போகின்றது...
பல மனங்கள்
ஏனோ
பொருந்தி
போவதில்லை...
வாழ்க்கையில்....

...வரதட்சணை...

கட்டண
உயர்வாம்....
ரயிலில், பேருந்தில்,
பள்ளியில்,
கூடவே
ஆண் வீட்டிலும்...



S.S. கார்த்திக், DME
உள்ளிக்கோட்டை

**பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள்
பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்**

# திறவுகோல்

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த கட்டுரைகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் கொண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

---

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

---

மன்னார்குடி படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம் பெற செய்ய
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

---

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைப்பேசிக்கே மின்னிதழை பெற
பகிரி: +91 8220567322

---

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய
http://maintharkal.mannai.in

---

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

கி. மாணிக்கம்
திறவுகோல் ஆசிரியர் குழு

## 2015ம் ஆண்டு முதல்
## மன்னையின் மைந்தர்கள் குழுவின் பணிகள் ....

காவிரி, உரிமை மீட்பு குழுவின் பனங்குடி, இந்திய அரசின் பெட்ரோலிய ஆலை முற்றுகை போராட்டத்தில் மன்னையின் மைந்தர்கள் பிற போராட்ட குழுவுடன்

சீமை கருவேல மரம் அழிப்பு மன்னை தொடர்வண்டி நிலையம் அருகில்

இரத்த தான முகாம்

கடலூர் வெள்ள நிவாரண பணிகள்

பூமியை காப்போம் கருத்தரங்கம் (தேசிய மேல்நிலைப் பள்ளி - மன்னார்குடி)

நம்மாழ்வார் பூங்கா அமைத்தல் (தொடர் வண்டி நிலையம் அருகில் )

நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு

தோழர் கு. முத்துகுமார் 7ம் ஆண்டு நினைவு நாள்

உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்கள் பங்குபெற்ற நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம்

தொடர்வண்டி நிலைய கருவேல மரம் அகற்றல் மற்றும் சமநிலைப்படுத்துதல்

உலக சுற்றுசூழல் தின அன்று தொடர்வண்டி நிலையத்தில் இருக்கும் கருவை மரங்களை அகற்றும் பணி நடைபெற்றது

ஜி. ஆர். தோப்பு சீமை கருவேல மரங்கள் அழிப்பு

மாணாக்கர்களுக்கு கையேடு, எழுதுகோல் வழங்கிய மன்னையின் மைந்தர்கள் குழு

<u>நம்மாழ்வார் ஏரியில் நடைபெற்ற பணிகள்</u>
சீமை கருவேல மரங்கள் அழிப்பிற்கு பின் தூர்வாரி மீட்டெடுத்தல்
பழைய சுவர்களில் வெள்ளையடித்தல்
நிலத்தடி நீர் அதிகரிக்க வேண்டி செய்த பணி
குழாய் பதிக்கும் பணி
விதை விதைப்பு, மரக்கன்றுகள் நடப்பு

திறவுகோல் மின்னிதழ் வெளியீடு

மன்னையின் மைந்தர்கள்
மண்ணின் மாற்றத்தை நோக்கி

## எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்

## +91 8220567322